மதீனாவை நோக்கி

-நூன்-



சுடர் பதிப்பகம்

மதீனவை நோக்கி

: நூன் :

சுடர் பதிப்பகம்,
157, 31-வது தெரு — இரங்கூன்.

முதற் பதிப்பு: அக்டோபர் 1957.
உரிமை ஆசிரியருக்கு
சுடர் பிரசுரம்—1

காணிக்கை

அறியாப் பருவத்தில் அன்னையை இழந்த என்னைப் பரிவுடன் வளர்த்து ஆளாக்கிய தாயினும் சிறந்த தாயாம் என் அன்புப் பாட்டி ஆமினு அவர்களுக்கு

விலை: கியா 1.20

ஜெமினி அச்சகம், 243, மவுங்தாலே வீதி, இரங்கூன்.

முன்னுரை

இஸ்லாமிய வரலாறு அறிந்தோர் உள்ளத்திலே எண்ணற்ற எண்ண அலைகளை எழுப்பும் தலைப்பு "மதீனவை நோக்கி...." என்பது.

மா நபியவர்கள் மதீனவை நோக்கிச் சென்ற நிகழ்ச்சி, இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலும் ஒரு முக்கியமான திருப்பமாகும். இதை எடுத்துக் காட்டும் வகையிலேயே ஹிஜ்ரீ ஆண்டுக் கணக்கும் அந்த நாளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மதீனவை நோக்கிச் சென்று மாபெரும் வெற்றி கண்ட மா நபியின் வாழ்விலிருந்தும், அவர்களைப் பின்பற்றி உயர்வு கண்ட இறை நேசச் செல்வர் சிலரின் வரலாறுகளிலிருந்தும் நெஞ்சைத் தொடும் சில நிகழ்ச்சிகளைச் செஞ்சொல்லோவியங்களாக்கித் தந்திருக்கிறார், அன்பர் 'நூன்' அவர்கள்.

"வேனலிற் கிடந்துடல் வெதும்பிய போதிலும், தீனிலை மறுத்திடாத" ஸய்யிதினா பிலால்; ஏழையின் குடிலை இறைவனின் இல்லமாகக் கருதி, அரபு நாடு செல்லாமலே புனித ஹஜ்ஜின் பயனைப் பெற்ற அஹ்மது அஷ்காக்; அவரோடு தொடர்புகொண்ட துன்னூன்; நீதியின் அழகைக்காத்த அம்ரு;

இறந்தும் இறவாப் புகழ்பெற்ற குபைப்; அன்னையின் ஆணை மீறாத உவைஸ் ஆகியோருடைய வரலாறுகள் இந் நூலில் புது முறையில் தரப்பட்டிருக்கின்றன.

நண்பர் நூன் எழுத்துத் துறையில் நீண்டநாள் அனுபவம் பெற்றவர். சொல்லின் திறனறிந்தவர்; சொல்லுந்தரம் அறிந்தவர். எனவேதான் அவர் எழுத்தினூடே வாசகர்கள் தம்மை யறியாமலே இழுத்துச் செல்லப்படுகிறார்கள்.

இக்கட்டுரைத் தொகுதியைப் படித்து முடித்தவுடன், நூன் அவர்களுடைய பிற எழுத்தோவியங்களைத் தேடிப் படிக்க வாசகர்கள் தூண்டப்படுவார்கள் என்பது திண்ணம்.

அழகிய முறையில் இதை வெளிக் கொணர்ந்த "சுடர் பதிப்பக"த்தினர், நம் வாழ்த்துக்குரியவர்கள்.

மதறஸ்,
27—9—57

வஸ்ஸலாம்.
ஆ. கா. அ. அப்துஸ் ஸமது

முகவுரை

மக்கா கண்ட மா நபியவர்களுக்கு சோதனைமிக்க கட்டத்திலே புகல் அளித்து, பின்னர் அவர்கள் தூதுத்துவத்தின் புகழ் பரப்பிய பெருமை மதீனாவுக்கு உரியது. பெருமானாரின் பிறப்பினால் மக்கா சிறப்பில் உயர, அவர்களை வாழ்விலும் சாவிலும் ஏற்றதால் மேன்மை பெற்றது மதீனா. ஆகவே, அண்ணல் அவர்களை நேசிக்கும் நெஞ்சங்கள், அவர்கள் அடிச்சுவட்டில் நடக்கும் உண்மை இஸ்லாமியரின் உள்ளங்கள் அந்த நபியின் நன்னகரை மரியாதையுடனும் அன்புடனும் நோக்கி விழைவதில் என்ன வியப்பிருக்கமுடியும் ?

மதீனாவை நோக்கிச் சென்று தெய்வத்திருப்பணியில் வெற்றியுற்ற நபிகள் நாயகம் அவர்களுடைய புனித வாழ்விலிருந்தும் அவர்களின் நெருங்கிய தோழர்கள், ஆத்மீக அன்பர்கள் சிலரின் சீரிய வாழ்க்கைகளிலிருந்தும் சிற்சில உணர்வூட்டும் சம்பவங்களை "மதீனாவை நோக்கி" என்ற தலைப்பில் தொகுத்திருப்பது பொருத்தமானதென்றே கருதுகிறேன்.

விரிந்துகிடக்கும் இஸ்லாமிய வரலாற்றிலே நெஞ்சையள்ளும் பொன்னேடுகள் எத்தனையெத்தனையோ காணக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் சுவைபடத்தமிழக மக்களுக்குத் தரவேண்டுமென்ற எனது நெடுநாள் எண்ணம் நிறைவேறுவதின் முதல்படியாகவே இந்நூல் அமைகிறது.

"பாங்கோசை," "நிறைவு பெற்ற நெஞ்சம்," "நேர்மையின் அழகு," "மதீனாவை நோக்கி" முதலியன ஏற்கனவே சென்னை "மணி விளக்கு" மாத இதழில் வெளிவந்தவை. அவற்றை இத்தொகுப்பில் சேர்த்துக் கொள்வதற்கு இசைவு தந்ததுடன், நூலுக்கு

முன்னுரை வழங்கிய அன்புயர் நண்பர், ஆசிரியர் ஆ. கா. அ. அப்துஸ் ஸமது, எம். ஏ., அவர்களுக்கு என் ஆழிய நன்றி உரித்தாகும்.

இவ்வரலாற்றுத் தொகுப்பு புத்தகவுருவில் வெளிவருவதற்கொரு தூண்டுகோலாக யிருந்த தோழர் மு. சீ. மு. ஷாஹுல் ஹமீது அவர்களுக்கும், இதைத் தங்கள் முதல் பிரசுரமாக அழகிய முறையில் வெளியிட முன்வந்த சுடர் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, புனித நபியவர்கள் பிறந்த பொன்னாளின் தருணத்தில் என் முதல் நூல் வெளிவரத் துணை செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் !

இரங்கூன்,
1 ரபியுல் அவ்வல் - 1377

—*நூலன்*

உள்ளே ☆ ☆ ☆

இருளும் ஒளியும்	1
பாங்கோசை	24
இறந்தும் இறவாதவர்	35
நேர்மையின் அழகு	47
நிறைவு பெற்ற நெஞ்சம்	61
மதீனாவை நோக்கி	73

இருளும் ஒளியும்

அண்ணலின் கருணைக்கண்களில் நீர்பனித்தது.

பொறுமையில் சிறந்த அவர்களையும்கூட புத்திர பாசம் விட்டுவிடவில்லை.

பள்ளியிலிருந்தபோது பிள்ளையின் நிலை கேட்ட வுடனே அவர்களின் நெஞ்சத்தில் சோகம் புகுந்து கொண்டது.

அன்பர் ஒருவரின் தோள்மீது சாய்ந்தவர்களாய், மெதுமெதுவாக நடந்து மர்யம் பிராட்டியார் இல்லம் அடைந்தார்கள்.

அங்கே...

அன்னையின் மடியில் துவண்டு கிடந்தது குழந்தை—வெங்கனலில் அடிபட்ட பூங்கொடிபோல். திணறித் திணறி மூச்சுப்பறந்தது.

அதைக்கண்ட அன்புத் தந்தையாரின் இதயக் கரையிலே துன்ப அலைகள் வந்துமோதின.

நடுங்கும் கரங்களால் செல்வ மைந்தரை வாரி யெடுத்து, தமது மடியில் மெல்லென வைத்தார்கள்.

மகனரின் மலர் முகத்தை பார்வை கலங்க, இமை கொட்டாது பார்த்திருந்தார்கள்.

எவ்வளவு அருமையாகப் பெற்ற குழந்தை அது!

முதல் மனைவியார் கதீஜா பிராட்டியாரின் தலை மகனர் காஸீம் தமது நாலாவது ஆண்டிலே இறந்து விட்டார். அவரை அடுத்தார் அப்துல்லாஹ்! இரண்டாம் வயதிலேயே இறைவனடி சேர்ந்தார். அதன் பின்னர் நான்கு பெண் குழந்தைகளைவிட்டு இறந்து விட்டார் கதீஜா அம்மையார். அப்பால், வெகு காலத்துக்குப் பிறகு மர்யம் பிராட்டியாருக்குப் பிறந்தவர் தாம் இபுருகிம் —அன்று வாழ்வுக்கும் சாவுக்குமிடையே ஊசலாடிக்கொண்டிருந்த அந்தச் சின்னஞ் சிறு பாலகன்.

பிற்காலத்தில் தமது பெயரை விளங்கவைக்கவிருக்கும் ஒரே ஆண் மகன் என்று தாம் நினைத்திருந்த அந்தப் பிள்ளைக் கனியமுதம் பிறந்தபோது பெருமானர் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள்! நாள் தவருமல் மர்யம் அன்னையார் வீட்டுக்குச் செல்வார்கள். குழந்தையைக் கையில் எடுப்பார்கள். மடிமீது வைத்துப் பாசத்தோடு விளையாடுவார்கள்.

அந்த அருமைப் பிதாவின் மனக்கண்முன்னே இந்தச் சிறு மதலையின் மழலைப்பருவ நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக, அடுக்கடுக்காக ஓடி வந்தன. பாலர் இபுருகிம் தம் நெஞ்சில் தவழ்ந்தது, பிஞ்சு வாய் திறந்து பேசியது, பால் வதனம் ஒளியிடச் சிரித்தது போன்ற பல காட்சிகள் நேற்று நடந்தனபோல் பசுமையாகத் தோன்றின.

அப்போது வேதனை நிரம்பிய அவர்கள் நெஞ்சம் விம்மி உயர்ந்தது; தாழ்ந்தது. ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்கள்.

"இபுறாஹிமே! அல்லாஹ்வின் நாட்டத்துக்கு முன் நாங்கள் என்ன செய்ய இயலும்" என்ற வார்த்தைகள் அவர்களது இதய ஆழத்திலிருந்து வெளிப்பட்டன.

பிறகு பெருமானார் அவர்கள் பேசாதிருந்தனர்.

உயிர் ஒளியிட்டிருந்த உடலிலே சாவின் இருள் குவிந்துகொண்டுவந்தது.

வாய் மூடி, மௌனமாக இருந்த மோன நிலையிலே அண்ணல் அவர்களின் கண்களில் நீர் பெருகி வழிந்தது. அதைத் துடைக்கத் துடைக்க, ஆத்மிக ஒளி சுடரிடும் அவர்களது புனிதக் கண்கள் சிவந்தன. வியர்வை முத்திட்ட அவர்களது திருவதனம் புத்திர சோகத்தால் வெளுத்தது.

திடீரென 'கோ' என்ற அழுகைக்குரல் மர்யம் பிராட்டியாரின் வாயிலிருந்து பீறிட்டுக்கிளம்பியது. அடுத்து, பெண்களின் ஓலம் வீட்டை நிரப்பியது.

அப்போதுதான் பெருமானார் அவர்கள் மயக்கம் தெளிந்தார்கள்.

மடிமீது உயிரற்றுக்கிடந்த மைந்தனின் சடலத்தைப் பார்த்தார்கள்.

நெஞ்சத்தில் துக்கம் நிறைந்திருக்க—கண்களில் நீர் நிரம்பியிருக்க, அவர்களது புனிதவாய் மட்டும் எதுவும் அாற்றுமல், "நாம் எல்லோரும் இறைவனுக்கே உரியவர்கள் ஆவோம். அவனிடமே மீள்வோம்," என்று மெல்லென உச்சரித்தது.

"இபுறாஹிமே! இறைவனுக்கு விருப்பமான இந்த வார்த்தைகளைத் தவிர வேறு எதை நாங்கள் சொல்வது?" என்று அவர்கள் கூறியபோது, அவர்கள் குரல் கம்மியது; நா தழுதழுத்தது.

அண்மையில் தான் அருமை மகளார் ஜைனபை இழந்திருந்ததால், செல்வத்திருமைந்தர் இபுருகிமின் இறப்பினல் அண்ணல் அவர்கள் அளவிட முடியாத துக்கம் அடைந்தார்கள். அதனல் அவர்கள் என்று மில்லாத அளவு துயரத்துடன் அழுவதைக் கண்ட போது, வீட்டில் குழுமியிருந்தவர்களுக்கு வியப்பு உண்டாகியது.

மாநபி என்ருலும், அவர்களும் மனிதர் தாமே? மனிதரில் மனிதர் அல்லவோ அவர்கள்! தங்களது ரத்தத்தின் ரத்தமாக, தசையின் தசையாக உலகில் பிறந்து தங்கள் அன்பென்னும் அமுதால் வளர்ந்த அருமை மகனரின் மறைவுக்காக கண்ணீர்விட்டு வருந் தாமல் இருக்க முடியவில்லை அவர்களுக்கு.

உற்றவர்களின் மறைவின்போது வாய்விட்டு அாற்றுவதைத்தானே வேண்டாம் என்று அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லியிருக்கிருர்கள்?

"இதயத்தில் தோன்றும் அன்பு, இரக்கம் போன்ற உணர்ச்சிகள் உங்கள் கண்களின் மூலம் பீறிட்டுக்கொண்டுவருவதை உங்களால் தடுக்க முடியாது. மற்றவர்கள் மீது அன்பு கொள்ளாதவனே இரக்கம் கொள்ளாதவனே அல்லாஹ்வின் அன்புக்கோ இரக்கத்துக்கோ அருகதை இல்லாதவன் ஆகிவிடுகிருன்" என்று சொன்னர்கள், அல்லாஹ்வின் அன்புக்கும் இரக்கத்துக்கும் மிகமிகப் பாத்திரமாகியிருந்த அண்ணல் அவர்கள்.

வந்திருந்தவர்கள் மனது சமாதானம் அடைந்தவர்களாகச் சென்ருர்கள்.

அன்று பிற்பகல்...

ஒரு அசாதாரண சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

மனே நகரமே அல்லோல கல்லோலப்பட்டது. என்? அந்நகர மக்கள் தங்கள் வாழ்நாளிலே அது வரை கண்டறியாத—அவர்களது முன்னோரின் காலத்திலே நடந்ததாகக் கேட்டறியாத—புதுமை வானத்தில் நிகழ்ந்தது.

பகலும் இரவும் ஒன்றையொன்று தொட்டு வருவதை அவர்கள் கண்டதுண்டு. ஆனால் அன்று பகலே இரவாகிவிட்டதென்றால், பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்?

நீலவானில் தகிக்கும் ஒளிப்பிழம்பாகத் திகழ்ந்து கொண்டிருந்த சூரியன் சட்டென்று மங்கியது. அடுத்து செந்தழல் பந்தாக மாறியது. கடைசியில் செம்மையும் மறைந்து கங்குல் பரவியது.

எல்லோரும் ஆகாயத்தைப் பார்த்தனர். மேகம் மறைக்கவில்லை, ஆதவனை. சூரியனே அஸ்தமித்து விட்டது!

மிருகங்கள் மருண்டோடின. பறவைகள் கீச்சிட்டு அலறின.

வானத் திரைக்குப்பின் மறைந்திருந்த தாரகைக் கூட்டங்கள்கூட பளிச்சென்று பிரகாசித்தன.

உலகைச் சூழ்ந்திருந்த இருள் மக்களை மருளச் செய்தது. அச்சமும் பீதியும் அவர்களின் உள்ளங்களில் அந்த இருளைப்போலக் கவ்வின.

"ஊழிகாலத்தின் அந்தகாரம் தான் சூழ ஆரம்பித்துவிட்டது."

"உலகத்துக்குப் பேராபத்து வந்துவிட்டது. எந்த நேரம் என்ன நேருமோ?"—

பரபரப்படைந்திருந்த மக்களது உள்ளங்களின் எதிரொலிகளாக பலப்பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

"அல்ல, ஆண்டவனுக்குப் பிரியமானவர்களில் யாராவது இறந்திருக்கவேண்டும். இல்லாவிடில், புதுமையான இந்தச் சம்பவம் என் நிகழவேண்டும்?"—தெருவிலே கூடி நின்றவர்களில் பலர் இவ்விதம் தங்களுக்குள்ளே கேட்டனர். மெல்லப் பேசிக்கொண்டனர்.

"முகம்மதுவின் மகன் இபுறுகிம் இன்று இறந்த செய்தியை கேட்கவில்லையா?" என்று முஸ்லிம் அல்லாதவர்களிடையே ஒருவன் கூறினன்.

"ஆம், அதுதான் காரணமாக இருக்கவேண்டும்," என்று அக்கூட்டம் ஏகோபித்துச் சொன்னது.

"முகம்மது சாதாரண மனிதர் அல்ல. இது எனக்கு ஏற்கனவே தெரியும்," என்று ஏதோ தெரிந்தவர்போல யாரோ ஒருவர் பேசினர்.

"அவர் அல்லாஹ்வின் உண்மையான தூதராக இல்லாவிட்டால், அவருடைய சிறுகுழந்தையின் இறப்புக்காக இவ்வித அதிசயமான கிரகணத்தை என் உண்டுபண்ணவேண்டும்?" என்று கேட்டார் அவர்.

"இதை நாங்களும் அறிவோம்," என்று வேறு சிலரும் சொன்னர்கள்.

அந்த முஸ்லிம் அல்லாதவரைப் போலவே முஸ்லிம்களும், என், நாயகம் அவர்களின் தோழர்களும்கூட, "அல்லாஹ்வின் திருத்தூதருடைய ஆண் மகவு இறந்த அவதியினலேயே, சூரிய கிரகணத்தைக்காட்டி ஆண்டவன் துக்கம் கொண்டாடுகிருன்," என்ருர்கள்.

★ ★ ★

"அல்லாஹ்வைத்தவிர நாயன் இல்லே. முகம்மது அவனது தூதர்"—இந்தக் கலிமாவை கதீஜா பிராட்டியார் முதல் முதல் ஏற்ற நாளிலிருந்து நாயகத்திருமேனி அவர்கள் இஸ்லாம் என்னும் சாந்தி மார்க்கத்தை ஆரம்பத்தில் மறைமுகமாகவே போதித்து வந்தார்கள்.

நபித்துவம் வந்து மூன்று ஆண்டுகள் வரை அவர்கள் பிரச்சாரம் ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டிருந்தது. சொந்தக் குடும்பத்தாருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கு மாத்திரமே உபதேசம் செய்தார்கள்.

நான்காம் ஆண்டு பிறந்தது.

"உம்முடைய உறன்முறையாருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக!" என்ற கட்டளை இறைவனிடமிருந்து வந்தது.

"உமக்கு உத்திரவிடப்பட்டிருப்பதை பகிரங்கமாக அவர்களுக்கு எடுத்துரைப்பீராக! இணை வைப்பவரைப் புறக்கணித்துவிடுவீராக!" என்று அடுத்து வந்த தெய்வீகச் செய்தி கூறியது.

ஒருமுறைக்கு இருமுறை ஒட்டகை அறுத்து, உறவினருக்கு விருந்து வைத்தார்கள் அண்ணல் நபியவர்கள். வயிறார உண்ண வந்தார்களே ஒழிய, அவர்கள் மனமார இறைதூதரின் பொன்னுன போதனைகளைக் கேட்கவரவில்லை.

"சத்தியப் பிரச்சாரத்தில் எனக்கு உற்ற துணையாக நிற்க உங்களில் யாரும் உண்டா?" என்று நபியவர்கள் கேட்டபோது, "இதோ, நானிருக்கிறேன்!" என்று மிக இளவயதினரான அலீ முன்வந்தார். திருக்கலிமாச்சொல்லி இஸ்லாத்தை இரண்டாவதாக ஏற்றிருந்தார், ஆபுதாலிபின் குமாரரான அவர்.

அதைக்கண்ட மற்றவர்கள், "அபுதாலிப்! இனி நீர் உமது மகனுடைய உத்திரவுக்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும்!" என்று கேலி பேசி, சிரித்துவிட்டுச் சென்றார்கள்.

கருமமே கண்ணாகயிருந்த நபியவர்கள் பொறுமையுடன் தங்களது போதனைகளைத் தொடர்ந்து நடத்திவந்தார்கள்.

ஒரு நாள் ஸபா குன்றின் அடிவாரத்தில் மக்கா வாசிகளைக் கூடும்படி செய்தார்கள்.

"நீங்கள் ஏக நாயனாகிய அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கைகொண்டு உருவ வழிபாட்டை விட்டு ஒழியுங்கள். இல்லாவிட்டால், உங்கள் மீது கடுமையான வேதனை இறங்கும்," என்று எச்சரித்தார்கள்.

அங்குவந்திருந்த குறைஷிகளின் உள்ளங்களில் கொடுஞ்சினம் குமுறியது.

அண்ணல் அவர்களின் பெரிய தந்தை அபூலஹப் அடாது சொல்லி, அவர்கள்மீது மண்ணை வாரி இறைத்தான். நபியவர்களின் அன்பு நெஞ்சத்தில் வேதனை தைத்தது. இருந்தாலும், மனம் தளரவில்லை அவர்கள்.

அன்று முதல் கஃபா சென்று தங்கள் கொள்கைகளை பகிரங்கமாகப் போதிக்கத் துவங்கினார்கள். மக்களை எச்சரித்தார்கள்; கெஞ்சினார்கள். அவர்களுக்கு அச்சமூட்டினார்கள்; நேர்வழி காட்டினார்கள்.

ஆனால் அந்த ஆணவக்காரர்கள் வள்ளல் நபியவர்களின் வார்த்தைகளை ஏற்காமலே இருந்து வந்தார்கள். அப்படி ஏற்றுவிட்ட ஏழைகளை பெருமானார் அவர்கள் கஃபாவுக்கு அழைத்துச்செல்லும் போதெல்லாம், அவர்களைப் பரிகசித்தார்கள். பரிகசிக்கும்படி தங்கள் சிறுவர்களையும் ஏவி விட்டார்கள்.

"நம்மையெல்லாம் ஒதுக்கிவிட்டு இதோ போகிறாரே, அவருக்குத்தான் இறைவன் நேர்வழியைக் காட்டியிருக்கிறான்!" என்று சொல்லி, கும்மாளமிட்டுச் சிரித்தார்கள்.

ஆனாலும் என்ன?

சிற்றோடை பெரிய ஆறாகப் பெருக ஆரம்பித்தது. அதன் வேகத்திலே தங்கள் பண்டை மார்க்கம் அடித்

தூக்கொண்டு போகப்படுமே என்று அஞ்சினர், குறைஷிகள். பின், நாட்டில் அவர்கள் கொண்டிருந்த ஆதிக்கம் என்னவது?

கஃபாவின் காவலர்கள் என்ற தலைமைப்புகழ்—ஆண்டவன் குடும்பத்தினர் போன்ற பட்டம், பதவிகள்—இவையெல்லாம் பரவிவரும் இஸ்லாமிய வெள்ளத்தை எதிர்த்து நிற்கமுடியாமல் போய்விடுமே என்று பயந்தனர்.

“இறைவன் முன் எல்லோரும் சமம். மனிதரில் நல்லவர், கெட்டவர் என்பதைத்தவிர வேறு பாகுபாடில்லை,” என்ற கொள்கையின்முன் அரசன், அடிமை, பணக்காரன், ஏழை என்ற இனக்கட்டுப்பாடுகள் தகர்ந்து சிதறுவதைக்கண்ட அவர்கள் உள்ளங்கள் பதைபதைத்தன.

ஆகவே, அண்ணல் அவர்களை மக்களின் முன் இழித்துச் சொல்லி, அவர்களுடைய பிரச்சாரத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடத் துவங்கினர்.

வெளியாரிடையே முகம்மது நபியவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தை வலிமையுடன் நடத்தும் வழிகளை ஆராயக் கூட்டம் ஒன்று விரைவில் கூடியது.

“முகம்மது ஒரு ஆருடக்காரர் என்று சொல்வோம்,” என்று ஒருவர் யோசனை கூறினர்.

“இதை எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். சோதிடர்களை நான் கண்டிக்கிறேன். முகம்மதுவின் போதனைகள் அவர்கள் சொல்லும் விஷயங்களைப் போல இல்லையே!” என்றார் முகைராவின் புதல்வர் வாலீத்.

"முகம்மது ஒரு பைத்தியக்காரர் என்று கூறலாம்!"—இது மற்றொருவரின் அபிப்பிராயம்.

"இது கொஞ்சமும் நம்ப முடியாதது அல்லவா?" என்ற பதில் வாலீதிடமிருந்து வந்தது.

"ஒரு கவிஞர் என்றால்...?" என்று மூன்றாமவர் கேட்டார்.

"கவிகள் எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாதா! நிச்சயமாக, அவற்றினின்றும் வேறுபட்டவை முகம்மதுவின் வாய் மொழிகள்," என்றார் வாலீத்.

"அவரை ஒரு சூனியக்காரர் என்று அழையுங்கள்," என்று சொன்னார் வேறு ஒருவர்.

"அவருடைய தூய குணம், அவர் கூறும் செய்திகளில் காணும் கண்ணியம், அவரது ஒழுக்கமான நடை, உடை—இவைகளை எந்த மந்திரவாதிகளிடமும் காண முடியாதே!" என்று வாலீத் எடுத்துக்காட்டினார்.

"அப்படியானால் அவரைப்பற்றி உமது கருத்துத்தான் என்ன?" என்ற கேள்வி ஐந்தாமவரிடமிருந்து கிளம்பியது.

"அவருடைய வார்த்தைகள் மிகத்தூய்மையானவை. இனிமையானவை. பெற்றோரிடமிருந்து பிள்ளைகளை—பிள்ளைகளிடமிருந்து பெற்றோர்களை—கணவரிடமிருந்து மனைவியரை—சகோதரர்களிடமிருந்து சகோதரிகளை பிடுங்கிக்கொள்ளும் அளவுக்கு அவை மனதைக் கவரக்கூடியவையாக இருக்கின்றன," என்றார் வாலீத்.

அவர் சொல் அம்பலம் ஏறவில்லை. குறைஷிகள் நபியவர்களை ஆருடக்காரர்—பைத்தியக்காரர்—மந்திரவாதி—கவிஞர் என்று பலவாறு அழைத்தார்கள். நிந்தனை செய்தார்கள். பழித்தார்கள்.

அந்த நேரத்தில் யமன் தேசத்திலிருந்து பெயர் பெற்ற மந்திரவாதியான ஜமாது மக்கா வந்தார்.

"முகம்மதுவைப் பிடித்தாட்டும் கெட்ட பிசாசுகளை நான் விரட்டுகிறேன்," என்று குறைஷிகளிடம் உறுதி சொன்னார்.

'ஆமாம், பிசாசு பிடித்திருப்பதாலேயே முகம்மதுவின் பேச்சில் அவ்வளவு வசியம் இருக்கிறது'—என்ற நினைப்பில் இருந்த மக்காவாசிகள் ஜமாதின் பேச்சைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

உத்தமத் திரு நபியவர்களிடம் வந்தார் ஜமாது. அவர்களுக்குத் தாம் வைத்தியம் செய்ய விரும்புவதாகச் சொன்னார்.

"முதலில் நான் சொல்லுவதைக் கேளும்," என்றவர்களாக, திருமறையின் தெள்ளிய வசனங்களில் ஒரு சிலவற்றை ஓதினார்கள் அண்ணல் அவர்கள்.

அவற்றைக்கேட்ட ஜமாதுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. மீண்டும், மீண்டும் ஓதுமபடி சொன்னார்.

மூன்றும் முறையாக நபியவர்கள் ஓதியபோது, ஜமாதின் மனம் மாறிவிட்டது.

"குறிசொல்லுபவர்களை நான் கேட்டிருக்கிறேன். மந்திரவாதிகளைக் கேட்டிருக்கிறேன். கவிஞர்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் அல்லாஹ்வின் சாட்சியாக, இந்த வசனங்களுக்கு ஒப்பு, உவமை இல்லை. அவை ஆழங்காணமுடியாத கடலாக அல்லவோ இருக்கின்றன!" என்றார் அவர், தம்மையும் அறியாமல்.

பிறகு நபியவர்களின் வலது கையைப் பிடித்து விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்.

மற்றொரு சமயம்...

புகழ்மிக்க கவிஞரும் நல்ல அறிஞருமான அவ்ஸைத் குலத்தலைவர் துவல் இப்னு அமர் மக்கா வந்தார்.

நகரவாயிலிலே அவரை வரவேற்ற மக்க நகரத்துத் தலைவர்கள் அவரிடம் பெருமானார் அவர்களைப் பார்க்கவேண்டாம் என்று எச்சரித்தார்கள்.

"முகம்மதுவின் வார்த்தைகள் மக்காவில் பலத்த குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டன. அண்மையிலும் தலைவிலும் அவை தீமையைப் பரப்பிவிட்டன," என்றார்கள்.

அதைக்கேட்ட அவர் அண்ணல் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்தார். அப்படியே காண நேர்ந்தாலும், தமது பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொள்வார். சமயங்களில் கண்களையே மூடிக்கொள்வார்.

ஒரு நாள் கஃபாவிலே தொழுதுகொண்டிருந்தார்கள் திருநபியவர்கள். அவர்களது வாயிலிருந்து உதிர்ந்த ஒருசில வசனங்களை துவல் செவிமடுக்க நேர்ந்தது. தற்செயலாக அவர் காதில் விழுந்த அந்த வேத வசனங்கள் அவரது உள்ளத்தில் ஒருவிதக் கிளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன.

தொழுகை முடிந்து நபியவர்கள் வீடு திரும்பிய போது, கவிஞரும் அவர்களைப் பின்பற்றிச் சென்றார். திருமறை வசனங்கள் சிலவற்றை ஓதும்படி கேட்டார். பெருமானார் அவர்களும் அப்படியே செய்தார்கள். அவர்கள் ஓதிய இறைமறையின் உயர் உரைகள் கவிஞரின் மனதைக் காந்தம்போல் ஈர்த்தன.

இப்படியாக, மந்திரவாதிகளையும் கவிஞர்களையும் கூட உண்மை மார்க்கத்தின்பால் திருப்பிய நபியவர்களிடம் திருமறையின் வசனங்களைத்தவிர எவ்வித மந்திரமும் இருக்கவில்லை. பழமையில் ஊறிப்போ

யிருந்த நிலைமையில், மந்திரத்தில் நம்பிக்கைகொண்டிருந்த மாந்தருக்கு நபியவர்களின் புதுமையான காரியங்கள் எல்லாம் மந்திர வித்தைகளாகத்தோன்றின போலும்! உண்மையில் "அல்லாஹ் ஒருவன்" என்ற மூல மந்திரமே நபியவர்களுடைய சக்தியின் வற்றாத ஊற்றாக இருந்தது.

அதை உணராத குறைஷிகள் நபியவர்களை அவர்களின் சத்தியப்பிரச்சாரத்தினின்றும் விலகச்செய்ய புதிய திட்டம் ஒன்றை மேற்கொண்டனர். தங்களில் மிகச் செல்வாக்குள்ள தலைவரான உத்பாவை நாயகம் அவர்களிடம் சமாதான முறையில் அனுப்பிவைத்தனர்.

அல்லாஹ்வுக்கு அடுத்தபடியாக, தங்களது முந்நூற்றுக்குமேற்பட்ட குட்டிதெய்வங்களையும் அண்ணல் அவர்கள் ஏற்றுக்கொள்வதானல், அவர்களின் புதிய மார்க்கத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருந்தனர் குறைஷிகள்.

அவர்கள் சார்பில் நபியவர்களிடம் சென்ற உத்பா "என் மகனே! உம் விருப்பம்தான் என்ன? பணம் திரட்டுவதென்ருல், நீர் திருப்தியடையும் அளவுக்கு செல்வத்தை வாரித்தருகிறோம். உன்னத பட்டங்கள், கௌரவங்கள் வேண்டுமா? உம்மை எங்களது தலைவராக்குகிறோம். நாடு வேண்டுமானல் சொல்லுங்கள், உம்மை எங்களது அரசராகவே ஆக்குவோம். அழகிய மனைவியர்மீது இஷ்டப்படுகிறீர்களா? கேளுங்கள், குறைஷிக்குலத்திலேயே எழில்மிக்க பெண்களைத் தருகிறோம்," என்ருர்.

அந்த ஆசை மயக்கத்திலே அண்ணல் அவர்கள் வீழ்ந்துவிடவில்லை.

எல்லாம்வல்ல அல்லாஹுவுக்கு அடுத்தபடியாக கல்லாலும், வெறும் மண்ணுலுமான தெய்வங்களை ஏற்றுக்கொள்வதற்காக குறைஷிகள் தருவதாக முன்

வந்த பொன், மண், பெண் எதையுமே ஏற்க அடியோடு மறுத்துவிட்டார்கள் அவர்கள்.

"இதில் ஒன்றும் எனக்கு வேண்டாம். அல்லாஹ்விடமிருந்து எனக்குத் தெய்வீகச் செய்தி வந்திருக்கிறது. அதை உங்களுக்குச் சொல்ல வேண்டியது என் கடமை," என்று உறுதியாகச் சொன்னார்கள். பிறகு அல்லாஹ்விடமிருந்து தங்களுக்கு அவ்வப்போது வந்த புனித வெளிப்பாடுகளில் சிலவற்றை ஓதிக்காண்பித்தார்கள்.

உண்மைத் திருமறையின் உயர்ந்த கருத்துக்களிலே தமது உள்ளத்தைப் பறிகொடுத்தவராக தமது மக்களிடம் திரும்பினர் உத்பா.

"கவியோ மந்திர உச்சாடனமோ, ஆருடமோ அல்லாத வசனங்களையே முகம்மதிடம் கேட்டேன். அவரைத் தனியாக விட்டுவிடுங்கள்," என்று சொன்னார்.

ஆனல் குறைஷிகளோ அண்ணல் அவர்களைத் தனியாக விட்டுவிடவில்லை.

ஏமாற்றம் அடைந்த அவர்கள், "உத்பாவும் மந்திர வசப்பட்டுவிட்டார்," என்று கூறியதுடன் நின்றுவிடாமல், முகம்மது நபியவர்களுக்கு எதிரான தங்கள் முயற்சிகளைத் தொடர்ந்தார்கள்.

அப்துல் முத்தலிபுக்கு பிறகு அண்ணல் அவர்களுக்கு ஆதரவு அளித்து வந்த அபூதாலிபின் மனதைக் குலைத்து, அண்ணல் அவர்களுக்கு எதிராக அவரைச் சரிக்கட்ட நினைத்தனர். அவரிடம் தூது அனுப்பினர்.

அப்போதும்கூட பெருமானர் அவர்களின் பிரச்சார வேகம் தணியவில்லை. அவர்களின் ஏகத்துவ போதனைகள் மக்காவின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலிக்க ஆரம்பித்தன.

குறைஷிகள் மீண்டும் அபூதாலிபை அணுகினார்கள். அரேபியாவிலேயே அழகு மிக்க வாலிபனை எற்று, முகம்மது நபியவர்களைத் தங்களிடம் ஒப்படைத்து விடும்படி கேட்டனர்.

அதுகேட்டுப் பெரிதும் வெகுண்ட அபூதாலிபு, "என் உயிர் போனாலும் இதற்கு ஒப்பமாட்டேன்," என்றார்.

அதன்பிறகு அண்ணல் அவர்களின் பிரச்சாரம் இன்னும் விரிந்தது.

அபூதாலிபின் வயதுக்கும் தகுதிக்கும் இனியும் மதிப்பளிக்க விரும்பவில்லை, குறைஷிகள்.

"உமது தம்பி மகனின் தீயபிரச்சாரத்தைத்தடுத்து நிறுத்தும். அல்லது விலகி நில்லும். இல்லாவிடில், அவருடன் பகிரங்கயாக ஒத்துழையும்! இரண்டில் ஒன்றை நாம் வாள் முனையில் பார்த்துக்கொள்வோம்," என்று அவரிடம் கண்டிப்பான முறையில் சொன்னார்கள்.

அபூதாலிபின் குடும்பமோ மிக எழைமையான நிலையில் இருந்தது. கொழுத்த செல்வந்தர்களான குறைஷிகளை எப்படி பகைத்துக்கொள்வது? ஆனால் அதே சமயம் தந்தையார் அப்துல் முத்தலீபு தம்மிடம் ஒப்படைத்துப்போன அருமைத் தம்பி மகனை ஒதுக்கிவிட முடியாதே! தமது மக்களையெல்லாம்விட முகம்மது அவர்கள் மீது தான் அவர் மிகவும் அதிகமான நேசம் கொண்டிருந்தார்.

அண்ணல் அவர்களை அணுகினார்; மிகக்கெஞ்சிச் சொன்னார்: "என் முதுமைப் பருவத்தின் மீது இரங்கும். தாங்கமுடியாத பொறுப்பை என் மீது சுமத்திவிடாதீர். குறைஷிகள் ஒன்று சேர்ந்தால், நாம் அவர்களை எதிர்த்து நிற்க முடியாது."

பெரிய தந்தையார்மீது பெருமானர் அவர்கள் மிகப் பேரன்புகொண்டிருந்தார்கள். அவர் தாமே அண்ணல் அவர்களுக்கு இந்த உலகில் இருந்த கடைசி ஆதரவு? அவர் சொல்லைக் கேட்பதா, அல்லது அவர் ஆதரவை இழப்பதா? மிகவும் இக்கட்டான நிலைதான்!

இருந்தாலும் என்ன?

இறை நம்பிக்கை அவர்களுக்கு ஒருவித துணிவைக்கொடுத்தது.

பிறப்பதற்கு முன் தந்தையையும், சின்னஞ் சிறு வயதில் தாயையும் இழந்து அனாதையாகிய அவர்களுக்கு முதலில் பாட்டனார் மூலமாகவும், பிறகு பெரிய தந்தையார் மூலமாகவும் உறைவிடமும் பாதுகாப்பும் இறைவன் அளிக்கவில்லையா?

அறியாமை இருள் சூழ்ந்த உலகிலே திக்குத்தெரியாது திகைத்து நின்றபோது அவர்களுக்கு அவன் நேர்வழி காட்டவில்லையா?

ஏழையாக இருந்த அவர்களை செல்வாக்குப் படைத்தவர்களாக ஆக்கவில்லையா? அதற்காக செல்வச் சீமாட்டி கதீஜாவை அவர்களது வாழ்க்கைத் துணைவியாக்கவில்லையா?

'அதே இறைவன் இப்போதும் கைவிட்டு விட மாட்டான். நிச்சயமாக காப்பாற்றுவான்; துணை இருப்பான்.'

"அல்லாஹ்வின் மீது ஆணை, எனது இடது கையில் சந்திரனையும் வலது கையில் சூரியனையும் கொண்டுவந்து வைத்து என்னுடைய பிரச்சாரத்தை விட்டொழிக்குமாறு கூறினாலும், நான் அதை ஒரு போதும் கைவிடமாட்டேன். இம்முயற்சியில் இறைவன் எனக்கு வெற்றிதரும் வரையில் அல்லது இதில் நான் அழிந்துபோகும் வரையில், எனது உண்மைப்

பிரச்சாரத்தை செய்தே தீருவேன்," என்று சொன்னார்கள். அவர்களின் குரலில் உறுதியின் உரம் ஏறியிருந்தது.

அற்புதமான அந்த மறுமொழி அபூதாலிபின் மனதைக் கவர்ந்தது. மைந்தரின் பேச்சைக் கேட்ட பின், தளர்ந்திருந்த அவரது நெஞ்சத்திலும் என்றுமில்லாத தைரியம் பிறந்தது.

அண்ணல் அவர்களை அப்படியே மார்புறத் தழுவினார். நெற்றியில் முத்தமிட்டார்.

"உம்முடைய விருப்பம்போலவே செயல் ஆற்றிவாரும். இறைவன்மீது ஆணை! என்ன நேர்ந்தாலும், உம்மை நான் கைவிடமாட்டேன்," என்று உறுதி கூறினார்.

இறைதூதரின் தெய்வீகப்பணிக்கு புது உத்வேகம் பிறந்தது. அந்த நிலையில், இஸ்லாத்தின் பரமவைரியாக இருந்த வீரர் உமர் நபியவர்களின் புதிய மார்க்கத்தைத் தழுவியது குறைஷிகளின் ஆத்திரத்திக்கு எண்ணெய் இட்டது.

அண்ணல் அவர்களையும் அவரைச் சார்ந்தோரையும் மூன்று வருஷ காலம் தள்ளிவைத்தனர். இருந்தாலும், அவர்களால் நபியவர்களை நேர்வழியினின்றும் பிறழ்ந்துவிடச் செய்ய முடியவில்லை.

ஆண்டுக் கணக்கில் மக்காவில் தாங்கள் செய்த நல்லுபதேசம் பாலையில் பெய்த மழையாகப்போக, ஆதரவை நாடி அண்மையில் இருந்த தாயிபுக்குச் சென்றார்கள் பெருமானார் அவர்கள். அங்கு அவர்களுக்கு சொல்லடியுடன் கல்லடியும் கிடைத்தன. சோர்வுற்றுத் திரும்பினார்கள்.

ஆனால் மக்காவில் கிடைக்காத நல்லாதரவும் தாயிபில் கிடைக்காத நல்ல வரவேற்பும் வெகு தூரத்தி

விருந்த யத்ரீபில் காத்திருந்தன, இறைவனின் திருத் தூதர் அவர்களுக்கு.

உத்தமத்திரு நபியவர்களின் சத்தியபோதனையைக் கேட்டு நெஞ்சம் நிறைந்து மகிழ்ந்திருந்த அந்த நகரைச் சார்ந்த சிலர் அண்ணல் அவர்களைத் தங்கள் ஊருக்கு வரும்படி தயவாகக் கேட்டனர். அதற்கு இறைவனின் ஆசியும் கிடைத்தது.

நபியவர்கள் மக்காவைவிட்டு வெளியேற முடிவு செய்திருந்த அதே நேரம், குலத்துக்கொருவராக ஒன்று சேர்ந்து நள்ளிரவிலே அண்ணல் அவர்களைக் கொல்லச் சதிசெய்தனர் குறைஷிகள்.

ஆனால் ஆண்டவன் நாட்டத்துக்குமுன் அவர்கள் திட்டம் எம்மாத்திரம்?

அல்லாஹ்வின் கருணையால் அந்தக்கொடுமனம் படைத்தவர்களுக்குத் தெரியாமல் வீட்டிலிருந்து வெளியேறினர்கள் செம்மல் முகம்மது அவர்கள். அபூ பக்ரின் துணையுடன் நெடும் பாலைவனத்தைக் கடந்து சுகமே யத்ரீப் வந்து சேர்ந்தார்கள்.

அங்கு மாநபியை அவர்களது நேசர்கள் மனமுவந்து வரவேற்றார்கள். அவர்களது திருப்பணியிலே தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்ய சித்தமாக இருந்தார்கள். நபியவர்களை ஏற்ற யத்ரீபும் 'மதீனத்துன்னபி' (நபியின் பட்டினம்) ஆகியது.

ஆனாலும் யூதர்களும் கிறிஸ்தவர்களும் மிகுந்திருந்த மதீனா வட்டாரத்தில் நபியவர்களுக்கு பலமான எதிர்ப்பு இருந்தது. ஆகவே, மக்காவில் மட்டுமின்றி மதீனாவிலும் இஸ்லாத்தின் எதிரிகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

தங்களின் கையிலிருந்து தப்பிவிட்ட முகம்மது அவர்களையும் அவர்களது மார்க்கத்தையும் அழித்

தொழிக்கக் கங்கணம் கட்டினர் மக்கத்துக் குறைஷிகள். பத்ரிலே, உஹதிலே, மதீனவின் எல்லையிலே மக்காவிலிருந்து பெரும் படைகளாகத்திரண்டுவந்து முஸ்லிம்களுடன் பொருதினர். தடவைக்குத் தடவை கூடுதலான பலத்துடன் வந்தபோதிலும், இறுதி வெற்றிகள் முஸ்லிம்களுக்கே கிடைத்தன.

அவையெல்லாம் நன்னம்பிக்கையில்லாதவர்களையும் நயவஞ்சகக்காரர்களையும் இஸ்லாத்துக்கு எதிரான காரியங்களில் மறைமுகமாக ஈடுபடச்செய்தன.

அந்தச் சூழ்நிலையில் தாங்கள் கண்ட கனவின் விளைவாக, கஃபாவைத் தரிசித்து வர மக்கா புறப்பட்டார்கள், அண்ணல் நபியவர்கள். ஆனல் எதிர்பாராத விதமாக ஹுதைபியாவில் மக்காவாசிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட, மக்கா புகாமலே திரும்பினர்கள். மூன்று வருடங்களில் அந்த ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள் எதிரிகள். ஆகவே, மதீனவிலிருந்து பெரும் படையுடன் வந்து மக்காவிலே வெற்றி வீரராகப் புகுந்தார்கள் மா நபியவர்கள்.

மக்கா வெற்றியானது முஸ்லிம்களின் சங்கடங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடவில்லை. கஃபாவை மீண்டும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவர சிலைஆராதனைக்காரர்களான அரபிகள் முயன்றனர். அவர்களை ஹுனைன் என்னும் இடத்தில் வெற்றிகண்டனர் வீர இஸ்லாமியப் படையினர்.

என்றுலும், நாட்டிலே இஸ்லாத்துக்கு எதிராக இருந்த சக்திகள் இன்னும் அறவே மறைந்துவிடவில்லை. அதுவரை சிலை வணக்கக்காரர்கள் தாம் இஸ்லாத்தை அழிக்கப் பாடுபட்டனர். அதில் யூதர்களும் ஒத்துழைத்தார்கள்.

ஆனல் ஹுனைன் யுத்தத்துக்குப் பிறகு வேதம் உடையோரும் புதிய மார்க்கத்தை அடக்கி, ஒடுக்க

முற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றின. ஸிரியா விலிருந்த ரோமர்கள் அரேபியாவின் எல்லேயிலே பெரிய சேனையைத்திரட்டி நிறுத்தியிருந்தார்கள். இஸ்லாத்தை பயமுறுத்தி நின்ற அபாயத்தை தடுத்துவிட முன்னெச்சரிக்கையாக தபூக்கை நோக்கி முஸ்லிம் படையொன்றை அழைத்துச்சென்ருர்கள் வீர நபியவர்கள். வாயிலே தேனும் நெஞ்சிலே விஷமும் கொண்டிருந்த நய வஞ்சகர்கள் அண்ணல் அவர்களுடன் செல்லாமல் மதீனவில் பின் தங்கினர்.

தபூக் சண்டையிலிருந்து நபியவர்கள் திரும்பிய மறு ஆண்டுதான் அவர்களது திருப்புதல்வர் இபுருகிம் மறைந்தார்.

★ ★ ★

மதீனவில் மட்டுமின்றி, நாடு முழுவதிலுமே பெரும் உணர்ச்சியூட்டியது, அதுவரை அரேபியா கண்டறியாத அந்தப் பூரண சூரியகிரகணம்.

நபித்துவம் வந்ததிலிருந்து இருபத்தொரு ஆண்டுகளாக அண்ணல் அவர்கள் எவ்வளவோ நயமுடனும் பயமுடனும் சொல்லியும் அவர்களது போதனைகளுக்கும் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்த திருவசனங்களுக்கும் செவிமடுக்காத நன்னம்பிக்கையற்றவர்கள் அந்த கிரகணத்தினல் பெரிதும் கவலேயடைந்தார்கள். நபியவர்களை ஏற்றுக்கொள்ளும் எண்ணத்தின் பால் சரிந்தார்கள்.

காலத்தால் தேய்ந்து கரைந்துபோன இபுருகிம் நபியவர்களின் கொள்கைகளே, மூஸா நபியவர்கள், ஈஸா நபியவர்கள் போன்ருேருக்கு இறங்கிய வேதங்களின் உண்மைகளைத் தன்னுள்கொண்டு விளங்கியது தானே முகம்மது நபியவர்கள் கொணர்ந்த திருமறை?

அதிலே, இபுறுகிம் நபியவர்கள், மூஸா நபியவர்கள், ஈஸா நபியவர்கள் ஆகியோரின் அற்புதங்களைப் பற்றியெல்லாம் கூறப்படவில்லையா?

இபுறுகிம் நபியவர்கள் எறியப்பட்ட தீக்குழி பூங்காவாக மாறியது.

மூஸா நபியவர்களின் கைத்தடி பாம்பாக மாறியது.

ஈஸா நபியவர்கள் கைப்பட, தீராத நோயும் தீர்ந்தது.

அவர்கள் எல்லோரும் தங்களது தெய்வீகத்தின் அடையாளமாக அந்த அற்புதங்களை நிகழ்த்தியும் அவர்களைப் புறக்கணித்த மக்களின் மீது இறங்கிய அல்லாஹ்வின் சாபங்களைப்பற்றி எச்சரிக்கை செய்த நபிகளின் நாயகமான முகம்மது அவர்களின் அற்புதம் தானோ அன்று நிகழ்ந்து மறைந்த அந்தச் சூரிய கிரகணம்?

'அதுவும் எந்தவிதமான அற்புதம்? கண்டும் கேட்டும் அறியாத புதுமை கலந்த அற்புதம்! அண்ணல் நபியவர்களுக்கு இழைத்த கொடுமைகளுக்காக ஊழியின் பயங்கரத்தைச் சற்றுகாட்டி அச்சமூட்டும் வகையில் அல்லவா அது அமைந்துவிட்டது!'—இவ்வாறு இஸ்லாத்தின் எதிரிகளுடைய நெஞ்சங்களில் எண்ணங்கள் குமிழியிட்டன.

அப்போது நபியவர்கள் மட்டும் வாய்திறந்து பேசாதிருந்தால்....

அவர்களுடைய பெருமை ஆயிரம் மடங்கு பெருகியிருக்கும். அவர்களுடைய தலைமீது குறியாயிருந்த கொடிய எதிரிகளும்கூட அவர்களுக்கு உடனடியாகப் பணிந்திருப்பார்கள். இத்தனை வருடங்களாக எட்டிப்பிடிக்காதிருந்த வெற்றியின் உயர் சிக

ரத்தை ஒரு நொடியில் அவர்கள் அடைந்திருக்கலாம்.

ஆனால்...

நம்பிக்கைக்கு உகந்தவர் (அல் அமீன்), உண்மையின் உறைவிடம் (அல் ஸாதிக்)—என்று சிறு வயதிலேயே மக்களால் புகழப்பட்டவர்கள் அண்ணல் அவர்கள்.

அவர்களது புதிய மார்க்கத்தை உள்ளூற வெறுத்துவந்த நிலையிலும் கூட, குறைஷிகள் அந்த 'அல்அமீன்' மீது கொண்டிருந்த நம்பிக்கை ஒருபோதும் மாறியதில்லை.

அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்ததுதானே முன் ஸபா மலைச்சாரலில் நடந்த சம்பவம்?

"எழுந்து எச்சரிக்கை செய்யும்!" என்ற இறைவன் கட்டளை வந்தபிறகு, ஒரு நாள் அவர்கள் ஸபா குன்றின் மீது நின்றவர்களாக, குறைஷிக் கூட்டத்தாரை அங்கு வரச் செய்தார்கள்.

குன்றின் அடிவாரத்திலே கூடிய மக்கா வாசிகளை நோக்கி, "எப்போதாவது நான் பொய் பேசியது உண்டா?" என்று கேட்டார்கள் புனித நபியவர்கள்.

"இல்லை, இல்லை!" என்ற ஏகோபித்த பதில் எங்கும் எதிரொலித்தது.

"இம் மலைக்குப்பின்னல் ஒரு பெரும் படை உங்களைத்தாக்க மறைந்திருக்கிறது என்று நான் கூறினல், நீங்கள் என்னை நம்புவீர்களா?" என்று அண்ணல் அவர்கள் கேட்டார்கள்.

"நம்புவோம். நிச்சயமாக நம்புவோம்," என்று அங்கு கூடியிருந்தவர்கள் ஒரே குரலில் கூறினர்கள்.

அந்த அளவு எதிரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருந்தார்கள் பெருமானர் அவர்கள். பகைவர்கள்

பாடிய வசைக்கவிகளிலும் கூட அவர்கள் 'அல்அமீன்' என்று தான் குறிப்பிடப்பட்டார்கள் என்றால், அவர்களது நெஞ்சத்தின் மாசு மருவற்ற தன்மையை என்னவென்று சொல்வது?

இப்படி நேர்மையின் நிறைகதிராகத் திகழ்ந்த அவர்கள் அண்மையில் நிகழ்ந்த அந்த அதிசய சம்பவத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக்கொள்ள விரும்பவில்லை.

அன்று நிகழ்ந்த கிரகணம் சற்றைப் பொழுதில் நீங்க, இருள் அகன்று, வானில் மீண்டும் சூரியன் ஒளியிடத் துவங்கவில்லையா? அதே போல் நம்பிக்கையின்மை என்னும் இருள் இஸ்லாம் என்னும் ஒளிக்கு கொஞ்சம் கொஞ்சமாக, ஆனால் நிச்சயமாக, இடம் விட்டே தீரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. நேர்மையின் சூரியன் தனது முழுப் பிரகாசத்துடன் தன் காலத்தில் ஒளி வீசும் என்று அல்லாஹ் அவர்களுக்கு ஏற்கனவே உறுதியளித்திருந்தான் அல்லவா?

குருட்டு நம்பிக்கையில் மூழ்கியிருந்த மக்களின் அறியாமையைக்கண்டு மனம் நொந்த அவர்கள், தெருக்களில், அங்காடிகளில் கூடியிருந்தவர்களை அழைத்துச் சொன்னார்கள்:

"சூரியனும் சந்திரனும் ஆண்டவனின் அடையாளங்கள். அவனுடைய உத்திரவின்படி அவை எழுகின்றன; ஊர்கின்றன. எந்த மனிதனுடைய பிறப்புக்கோ இறப்புக்கோ அவைகளின் கிரகணங்கள் நிகழ்வதில்லை. இது போன்ற சம்பவங்களை நீங்கள் கண்டால், அல்லாஹ்வை நினைத்துக்கொள்ளுங்கள்."

பாங்கோசை

அவர் மக்காவில் பிறந்தவர். ஆனால் தேய்ந்த கோதுமை நிறம். வெண்மை படர்ந்த சுருட்டை மயிர். பருத்துப் பிளந்த உதடுகள். ஆம், அவர் ஒரு ஹபஷி.

இருந்தாலும் என்ன? அவரது குரலில்தான் என்ன இனிமை, என்ன குழைவு! கேட்பவர் இதயங்களில் அது இன்பத் தேனை அல்லவா பாய்ச்சியது!

அவர் கொடுத்துவைத்தவர். மற்றெவருக்கும் கிட்டாததொன்று அவருக்குக் கிடைத்தது. எல்லாம் அவர் குரல் செய்த பாக்கியம்தான்.

அடிமையாயிருந்தபொழுதே அவர் இஸ்லாத்தைத் தழுவினார். அதனால் அவர் பட்டபாடு...நினைத்தாலும் நெஞ்சம் துணுக்குறும். பட்டப்பகல் வேளைகளில் பாலைவனத்தின் வெம்மணல் மீது கிடத்தப்பட்டார். அங்குமிங்கும் புரளாதிருக்க அவரது மார்பில் பாரங்கல் சுமையிருக்கும். கழுத்தில் கயிறிட்டு இழுக்கும் விஷமச் சிறுவர்கள் தரும் வேதனை வேறு. அது மட்டுமல்ல. சமயா சமயங்களில் இரும்புக் கவசமோ பசுத்தோலோ அணிவிக்கப்பட்டு, தகிக்கும் வெயிலில் மணிக்கணக்கில் அவர் நிலையாக உட்காரச் செய்யப்

பட்டார். அப்பப்பா, என்ன கொடுமை! மனிதத் தன்மையொழிந்து மிருக வெறி தாண்டவமாடியது. தமது எஜமானரிடமும் வேறு சில இஸ்லாத்தின் எதிரிகளிடமும் அவரடைந்த இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இதனுல் எல்லாம் ஏகனின் மீது அவர்கொண்டிருந்த நம்பிக்கை இம்மியும் குறைந்துவிடவில்லை. அல்லாஹ்வின்பால்பூண்டிருந்த அன்பு அணுவளவும் மாறிவிடவில்லை.

அந்த ஒரே அல்லாஹ்வின் மாண்பையும் அவனது திருத் தூதரின் மாட்சியையும், தினந்தோறும் ஐந்து முறை காற்றிலே பரப்பி, விசுவாசிகளை இறை வணக்கத்திற்கு நெஞ்சார அழைக்கும் பாக்கியம் பெரும் பாக்கியமல்லவா?

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலே மக்காவில் முஸ்லிம்கள் பெரும்பாலும் தனித் தனியேதான் தங்கள் வீடுகளில் தொழுது வந்தார்கள். ஒருசில சமயங்களில் தான் கூட்டு வணக்கம் செய்தார்கள். சிலை ஆராதனையாளர்களின் பகைமை வெறியைக் கிளப்புவது ஆபத்தாக இருந்ததால், அப்பொழுதெல்லாம் நன்னம்பிக்கை கொண்டவர்கள் வெகு அந்தரங்கமாகவே தொழுகைக்கு அழைக்கப்பட்டார்கள். ஆனுல் அவர்களெல்லாம் மதீனு சென்றடைந்த பிறகு, அவர்களைப் பகிரங்கமாகத் தொழுகைக்கு அழைக்க நல்லதொரு முறை அவசியமாகப்பட்டது.

இதுபற்றி ஆலோசிக்க நபிபெருமானுர் அவர்களின் தலைமையில் நடந்த கூட்டத்தில் பலதிறப்பட்ட யோசனைகள் சொல்லப்பட்டன. கிறிஸ்தவர்கள்போல மணியடிப்பதோ, யூதர்கள்போல கொம்பூதுவதோ நபிமணியவர்களின் மனதிற்குப் பொருத்தமாக தோன்றவில்லை. அப்பொழுது உமர் தாம் கண்ட கனவை எடுத்துச் சொன்னுர். அந்தக் கனவிலே தமது மனத்தில்

உதித்த பாங்கின் முறையையும், வசனங்களையும் வெளியிட்டார்.

அதைக் கேட்ட பெருமானார் அவர்கள் திருவதனத்தில் திருப்தியின் ஒளி படர்ந்தது.

"இன்ஷா அல்லாஹ், உம்முடைய கனவு சரிதான்" என்று மகிழ்வுடன் மொழிந்தார்கள்.

ஆனால் பாங்கு சொல்வது யார்? கனவு கண்ட உமரே அதைச் செய்யலாம். இஸ்லாத்தின் பரம வைரியாக இருந்து, பிறகு அதன் உண்மைத் தொண்டர்களில் ஒருவராய், ஒப்பற்ற வீரர்களில் ஒருவராய், உறுதுணையாளராய், உற்ற நண்பராய் மாறிவிட்டவர். அல்லாஹ்வின் தூதர் தோன்றிய அதே குறைஷிக் குலத்தில் பிறந்தவர். அவர் பாங்கு சொல்வது இஸ்லாத்திற்குப் பெருமையாகத்தானிருக்கும்.

இருந்தும், நபி அவர்களின் நினைவு அந்த விடுதலையடைந்த ஹபஷி அடிமையின் மேல்சென்றது.

அவர் இஸ்லாத்தில் சேர்ந்த முதல் எழுவரில் ஒருவர் என்பதால் மட்டும் அல்ல; இஸ்லாத்திற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்காக மட்டும் அல்ல; அவரது அடிமைத்தளை நீங்குவதில் முன்பு தாம் கொண்டிருந்த அனுதாபத்தால் மட்டும் அல்ல. அவரது மதுரக்குரலோசை பெருமனார் அவர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டது என்பதும் காரணம் என்று சொல்ல வேண்டும். இனிக்கும் சந்தத்தில் இசைக்கப்படும் இறைவன் புகழ் செவிகளில் பாயும் போது, மக்களின் உள்ளங்களும் நெகிழ்ந்துருகுமன்றோ?

எனவே, முகம்மது நபி அவர்கள் உமரிடம், "கனவில் நீர் கேட்ட வசனங்களை பிலாலுக்குச் சொல்லித்தாரும். அவர் குரல் உம்முடையதைவிடச் சிறந்தது. அவரே பாங்கு சொல்லட்டும்" என்றார்கள்.

இவ்விதமாக நபி அவர்களின் நல்லாசியுடன் பிலால் இஸ்லாத்தின் முதல் பாங்கை சொல்ல முடிந்

நாதர் பெருமானார் அவர்களின் பள்ளியருகே இருந்த வீட்டின் முகட்டில் நின்றவராய் அவர் தமது இனிய குரலையெழுப்பி முஸ்லிம்களை இறை வணக்கத்திற்கு அழைத்தார்.

அரசன் என்றும் அடிமையென்றும் பேதம் காட்டாத இஸ்லாத்தின் ஏகநாயகனைத் தொழுவதற்கு அடிமையாயிருந்த ஒருவரே முதன்முதலில் பாங்கு சொல்லி அழைத்தார் என்றால், அதில் வியப்பில்லை. இஸ்லாமிய சமத்துவத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, அந்த முன்னாள் அடிமைகூட உமர் போன்றோர்களால் "ஸய்யிதுனா" (எங்கள் தலைவரே!) என்றுதான் மரியாதையாக அழைக்கப்பட்டார்.

அவர் அல்லாஹ்வின் சாட்சியாகவும், அவனது தூதர் முஹம்மதின் சாட்சியாகவும், விசுவாசிகளைத் தொழுகைக்கு அழைத்தார். வெற்றிக்கு அழைத்தார்.

செயல்களில் சிறந்தவற்றிற்கும் நல்லவற்றிற்கும் அடிப்படை ஈமான் என்றே பிலால் கருதினார். அந்த ஈமான் என்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏகனுடையவும் அவனுடைய தூதருடையவும் புகழைக் கூறும் போது ஏற்படும் அளவு கடந்த ஆனந்தம் அவரது குரலில் என்ன அற்புதத்தைச் செய்து காட்டியது! பக்திப் பரவசத்தில், அன்பின் பெருக்கில் கிளம்பியெழுந்த இன்னிசை நாதம் கேட்பவர்கள் மனதில் தான் என்னென்ன செய்தது!

பிலாலின் பாங்கோசை கேட்கும்போதெல்லாம் மதீனா நகரமே நிலைகொள்ளாது போய்விடும்.

ஆடவர்கள் தங்கள் தொழில்களை அப்படியே நிறுத்திவிடுவார்கள். பெண்டிர்கள் அந்தப்புரத்திலிருந்து வெளிவருவார்கள். சிறுவர்களும்கூடத் தத்தம் விளையாட்டுகளையெல்லாம் விட்டு விட்டு பிலாலை சூழ்ந்துகொள்வார்கள்.

தொழுகைக்காக மக்கள் திரளாகக் கூடிய பிறகு பிலால் பெருமானரின் புனித இல்லத்தின் முன்னே நின்று அன்பொழுக, "அல்லாஹ்வின் ரசூலே! மக்கள் தொழக் காத்திருக்கின்றனர், வாருங்கள்!" என்பார்.

சத்தியத் திரு நபி அவர்களும் பள்ளி வந்து, பிலால் 'இகாமத்து' சொன்ன பிறகு தொழுகை நடத்துவார்கள்.

தொழுகையின்போது பிலால் பக்திப் பிரவாகத்தில் தம்மையும் அறியாமல் எல்லோரையும் முந்திக் கொண்டு "ஆமீன்" சொல்வதுண்டு. ஆனல் முஸ்லிம்கள் இமாமைப் பின்பற்ற வேண்டியது கடமையல்லவா? ஆகவே அப்பொழுதெல்லாம் பெருமானர் அவர்கள் தாங்கள் சொன்ன பிறகே அவ்விதம் சொல்லும்படி பிலாலுக்கு இன்சொல்லால் எடுத்துரைப்பார்கள்.

பிலாலும் பெருமானர் அவர்களைப் பெரிதும் நேசித்துவந்தார். அவரது சந்தோஷம், வாழ்வின் இலட்சியமெல்லாம் நபியவர்களுக்குத் தொண்டு செய்வதில்தானிருந்தது. எப்பொழுதும் அல்லாஹ்வின் தூதருடனேயே இருந்துவந்தார். அவர்கள் வெளியில் செல்லும் போதெல்லாம் தாமும் கூடச்சென்றார். தன்னலத் தியாகம் செய்யும் ஊழியராகவே பிலால் பெருமானர் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

மாநபி அவர்களும் தாங்கள் எங்கு சென்றாலும் பிலாலைத் தங்களுடன் அழைத்துச்செல்ல மறப்பதில்லை அவர்மீது அவ்வளவு அபிமானம் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் பிரயாணத்தின்போது ஓரிடத்தில் இரவு நெருங்கிவிட்டது. அவ்விடத்திலேயே இரவைக் கழித்துக்கொள்ள நாயகம் அவர்களது தோழர்களில் சிலர் விரும்பினர்கள்.

"இங்கு தங்குவதானல், தூக்கம் பிடித்துக்கொள் ளும். தொழுகையை மறந்துவிடக் கூடுமே," என்றார்கள் பெருமானர் அவர்கள்.

அப்பொழுது பிலால் முன்வந்து, எல்லோரையும் காலாகாலத்தில் தொழுகைக்கு எழுப்பிவிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இரவு முழுவதும் விழித்துக் கொண்டிருப்பதே அவர் எண்ணம். ஆனல் எப்படியோ தம்மையுமறியாமல் அயர்ந்துவிட்டார். கதிரவன் உதயமாகும்வரை எழுந்திருக்கவில்லை. அதற்கு முன் நபிகள் நாயகம் அவர்கள் விழித்துக்கொண்டார்கள்.

"பிலாலே! உம்முடைய பொறுப்பு என்ன ஆயிற்று?" என்று சற்று உரத்த குரலில் கேட்டார்கள்.

பதறியெழுந்த பிலால் "அல்லாஹவின் ரசூலே! இன்றுபோல் நான் என்றும் தூங்கியதில்லை. எதிர்பாராமல் நடந்துவிட்டது" என்று வருத்தமுடன் பதில் அளித்தார்.

அதற்குப் பெருமானர் அவர்கள், "நிச்சயமாக, ஆண்டவன் நாடினல் அவன் உங்கள் ஆத்மாக்களின் மீது ஆட்சி செலுத்துவான். அவன் விரும்பினல் அவற்றை உங்களுக்குத் திருப்பித் தருவான். நல்லது, எழுந்திரும்! பாங்குசொல்லி தொழுகைக்கு அழையும்," என்று சாந்தமாகக் கூறினர்கள்.

இவ்வாறு தம்மீது பரிவும் பாசமும் காட்டிய உத்தமத் திரு நபி அவர்கள் மீது பிலால் கொண்டிருந்த வாஞ்சையும் அன்பும் நாளுக்கு நாள் வளர்ந்து உரம் பெற்றன. எனவே, நபிபெருமானர் அவர்களின் மறைவினல் அவர் அளவிடமுடியாத சோகம் அடைந்தார். நாயகத் திருமேனியின் அன்பு, அருள் உருவத்தைக் காணுத—அவர்களது நலந்தரும் நற்சொற்களைக் கேளாத—வாழ்வு பிலாலுக்குப் பெரும் சூன்யமாகத் தோன்றியது.

காலமானது துயர் ஆற்றும் நல்ல மருந்தென்பார்கள். ஆனால் நாட்கள் ஓடி மறைந்தும், பெருமானார் அவர்களின் பிரிவாற்றாமை பிலாலின் நெஞ்சத்தை விட்டுக் கிஞ்சித்தும் அகலவில்லை. உள்ளத்தில் உறைந்து நின்ற வேதனையை மறக்க எண்ணிய அவர் தம்மை ஜிஹாத் செல்ல அனுமதிக்கும்படி கலீபா அபூபக்ரை கேட்டார்.

"அன்புயர் கலீபாவே! தாங்கள் எதற்காக என்னை விடுதலை செய்தீர்கள்? அல்லாஹ்வுக்காகவா, தங்களின் சொந்த நன்மைக்குத்தானா?" என்று கேட்டார்.

"அல்லாஹ்வுக்காகத்தான்" என்ற பதில் கலீபாவிடமிருந்து வந்தது.

"ஒரு மூமினின் செயல்களில் சிறந்தது ஜிஹாதாக இருக்கும் என்று நபியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அப் புனிதப் போரிலேயே என் மிஞ்சிய வாழ்வைச் செலவிட விரும்புகிறேன்" எனச் சொன்னார் பிலால்.

"அல்லாஹ்வுக்காகக் கேட்கிறேன். தள்ளாத வயதில் என்னை விட்டுச் சென்றுவிடாதீர்! உமது பிரிவை என்னால் தாங்கமுடியாது" என்று அபூபக்ர் வேண்டினார்.

அதற்குமேல் பிலால் என்ன சொல்லமுடியும்? தம்மீது இரக்கமுற்று பெரிய தொகையளித்துத் தம்மை விடுதலை செய்தவரல்லவா இன்று தம்மை வேண்டி நின்ற அபூபக்ர்? தமது அடிமைத் தளையை நீக்குவதில் நபி பெருமானார் அவர்களையும் முந்திக்கொண்ட தயாளரன்றோ அவர்? நன்றியுணர்ச்சி மேலோங்க, பிலால் அபூபக்ரின் கோரிக்கையை மறுதளிக்காமல் ஏற்றுக்கொண்டார். பிறகு கலீபா உமருடைய ஆட்சியிலுங்கூட, எவ்வளவோ விரும்பியும் பிலாலால் ஜிஹாதுக்குச் செல்ல முடியாமல் போய்விட்டது.

ஒரு முறை பிலால் உமருடன் பைத்துல் முகத் தஸுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள பரிசுத்தப் பள்ளியில் பாங்கு சொல்லும்படி அவரை கலீபா கேட்டார்.

அதற்குப் பிலால் "புனிதத் திரு நபியவர்களின் மறைவுக்குப் பின், பாங்கு சொல்லக்கூடாதென்று உறுதி செய்தேன். ஆனலும் தங்களின் வேண்டு கோளைத் தட்டமுடியவில்லை," என்று கூறிவிட்டு, மீண்டும் தொழுகையின் அழைப்பை விடுக்க முற்பட் டார்.

காற்றிலே தவழ்ந்துவந்த அவரது பாங்கோசை மக்கள் உள்ளங்களிலெல்லாம் விளக்கமுடியாத ஒரு சலனத்தை உண்டு பண்ணியது. பொங்கியெழுந்த மதுர நாதம் பாய்ந்தபோது கலீபா உமரின் நெஞ்சம் கிளுகிளுத்தது. உணர்ச்சிப் பெருக்கினல் அவரது தொண்டை கனத்தது. அபூ உபைதா, முஆதுஇப்னு ஜபல் ஆகியோர் அழுதுவிட்டனர்!

காலம் விரைந்தோடியது. பசுமையின் வளம் நிறைந்த ஸிரியா தமது பட்ட மனத்திலும் பசுமை தளிரச்செய்யும் என்ற எண்ணம் பிலாலின் மனதில் உதித்தது. அதன் பேரில் கலீபா உமருடைய சம்மதம் பெற்று, அந்நாட்டில் சென்று குடியேறினர்.

அங்கு வாழ்ந்திருந்தபோது ஓரிரவு பிலால் பரிசுத் தத் திருநபி அவர்களைக் கனவில் கண்டார்.

"பிலாலே! எத்தனை காலத்திற்குத்தான் உமக்கு இந்த வரண்ட வாழ்வு? எம்மைப் பார்ப்பதற்கான நாள் வந்துவிடவில்லையா?" எனப் பெருமானர் அவர்கள் மொழியக் கேட்டார்.

கனவுதான். ஆனல் அது பிலாலைத் தாம் அல் லாஹ்வின் தூதருடன் கழித்த—நினைத்தாலும் நெஞ்சத்

தில் தேன் ஊறும்—பழைய நாட்களுக்கல்லவா இட்டுச்சென்றது!

அதன் பிறகு அவர் எப்படி விரியாவில் நீடித்திருக்கமுடியும்? மதீனாவுக்கு விரைந்து சென்றார்!

அகிலத்துக்கோர் அருட்கொடையாய் வந்து, அனாதைகளின் ஆதரவாளராய், திக்கற்றவர்களின் தோழராய், மன்பதைகளின் பாதுகாவலராய் விளங்கி, அன்பினால் அன்பை வளர்த்து, உலகெலாம் அருளொளி பரப்பிச்சென்ற, திருமறை கொணர்ந்த நபிகள் நாயகம் அவர்களது அடக்கஸ்தலத்துக்கு வந்தபோது, பிலால் இனங்காணாத பரவசம் கொண்டார். அவரது உடல் சிலிர்த்தது. கண்கள் நீரைச் சொரிந்தன. பெருமானார் அவர்கள்மீது கொண்டிருந்த அன்பெல்லாம் வற்றாதசுனைபோல் பெருக்கெடுத்தது. வெகுநேரம் மெய்மறந்து தாஆ இறைஞ்சி நின்றார்.

பின்னர் நபிமணி அவர்களின் கண்மணிகளான பேரர்கள் ஹஸனையும் ஹுஸைனையும் அரவணைத்து, உச்சி முகர்ந்து, உவகையுடன் முத்தம் அளித்தார்.

அவ்விரு பாலகரும் பிலாலையோ, அவரது இனிய பாங்கோசையையோ மறந்துவிடவில்லை. முன்பெல்லாம் தங்களுக்கு இன்பம் தந்த அந்த பாங்கின் மதுர நாதத்தை மீண்டும் எழுப்புமாறு அவரை ஆசையுடன் வேண்டினர். பெருமானார் அவர்களது மடியிலே விளையாடி, அவர்களது அன்பெனும் அமுதுண்டு வளர்ந்த அப்புனிதச் சிறுவரின் வேண்டுகோளை அவர் எவ்விதம் மறுக்கமுடியும்? அவ்விருவரின் ஆவலைப் பூர்த்தி செய்வதும் மறைந்த மாநபி அவர்களின் நினைவுக்காகச் செய்யும் நல்லதொரு காரியம்தானே? 'சரி' யென்றார்.

பொழுது புலரும் நேரம் பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மதீனு நகர் முழுதும் பிலாலின் தேமதுரப் பாங்கோசை ரீங்காரித்தது.

"அல்லாஹ் அக்பர்!" என்ற ஆண்டவன் புகழை நான்கு தரமும் சொல்லும்போது பிலாலின் குரலில் உறுதி நிரம்பியிருந்தது.

அடுத்து 'அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்!' என்று ஆரம்பிக்கும்போது...அவரது குரல் கரகரத்தது.

பெருமானுர் அவர்கள் உயிரோடிருந்த காலத்தில், பாங்கு சொல்லும்போதெல்லாம் பிலாலுக்குத்தான் எவ்வளவு பெருமிதம்! எத்துணை ஆனந்தத்துடன் அவர்களது மாட்சியை உலகிற்கு எடுத்திசைத்தார். ஆனல் இன்றே? அவர்கள் தமது அருகில் இல்லை. மறைந்துவிட்டார்கள். அவர்களும் மனிதர்தாமே? இருந்தாலும், அந்த மனிதரில் மனிதரை, மனிதப் புனிதரை எப்படி மறக்கமுடியும்?

இரவெல்லாம் அந்த முஹம்மது நபியவர்கள் நினைவு தானே?

அவர்களது பெயரை உச்சரிக்கும்பொழுது, நெடுநாள் நெஞ்சில் புதைந்திருந்த சோகவுணர்ச்சிகள் பீறிட்டுக்கிளம்பின. அந்நிலையில் அவர் "முஹம்மது அல்லாஹ்வின் தூதர்" என்று ஒருமுறை, மறுமுறை உலகிற்கு நினைவூட்டிச் சொல்லும் போது, கேட்பவர் உள்ளங்களில் புல்லரித்தது. பெண்கள் திரை மறைவிலிருந்து ஓடிவந்தனர். நாயகம் அவர்களது நேயர்களின் கண்களினின்றும் நீர்வழிந்தோடியது. அன்று மதீனு நகர் என்றும் காணுத காட்சியைக் கண்டது.

உணர்ச்சி வெள்ளத்தில் உள்ளம் நிலை குலைந்தவராய் பிலால் அப்படியே பாங்கினைச் சொல்லி முடித்து மூர்ச்சையாகிவிட்டார்.

அன்பின் உருவம், அருளின் உறைவிடமாய் அஹ்மது ரசூல் அவர்களது நினைவைத் தம் உயிருள்ள வரை பிலால் மறக்கவில்லை. ஆனால் அதுவேதான் அவர் எழுப்பிய கடைசி பாங்கோசையாக முடிந்தது!

இறந்தும் இறவாதவர்

பிள்ளைக்கு ஆபத்து!

—அந்த நினைப்பு நெஞ்சில் எழ, அவளுக்குப் பகீர் என்றது.

தொட்டிருந்த வேலையை அப்படியே விட்டு எழுந்தாள். பரபரப்புடன் அங்கிருந்து சென்றாள்.

'பெண் புத்தி பின்புத்தி என்பார்களே, எவ்வளவு உண்மையான பேச்சு! இல்லாவிடில், அந்த விபரீத நிலை ஏற்பட்டிருக்குமா?' அதை நினைக்க நினைக்க, அவள் தாய் உள்ளம் துடிதுடித்தது. வேதனைச்சுமை இதயத்தை அமுக்கியும், கால்கள் கடுகி நடந்தன.

என்ன பேதமை! நெஞ்சத்தில் ஈரம் சுரந்த நிலையில் கொடிய எதிரியான அந்த மதீனாவாசியை எப்படி நம்பிவிட்டாள் அவள். பசித்திருந்த சிங்கத்திடம் மான் தன் குட்டியை அனுப்பியதைப்போல, தன் அருமைக் குழந்தையை மரண தண்டனையை எதிர்நோக்கிக்கிடந்த அந்தக் கைதியிடம் அன்றோ அனுப்பி வைத்தாள்!

அதுவும் எப்படி? கையில் ஒரு கத்தியுடன்! பலியே தனது உயிரை வாங்கப்போகும் கொடுவாளை ஏந்தி

பூசாரியிடம் சென்றதைப்போல அல்லவா தன் மகளை அங்கு போகும்படி செய்துவிட்டாள்?

பத்துமாதம் சுமந்துபெற்று, பாலூட்டிச்சீராட்டி, பரிவுடன் வளர்த்த அன்பு மகளை—அழகுச் செல்வத்தை சாவை நோக்கி வலிய அனுப்பிவைத்ததை எண்ணிப்பார்க்கவே கூசியது அவளுக்கு. குலை நடுங்கியது. பெற்றவயிறு பற்றி எரிந்தது.

அப்போது அவள் பட்ட வாதனை பேறு காலத்தில் அடைந்த வேதனையையும் மிஞ்சியது. பிள்ளைப் பாசம் பிடித்துத்தள்ள, சிறை அறையை நோக்கி விரைந்தாள். குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமே!

வழியிலே அவள் காதில் விழுந்த வார்த்தைகள் பேரிடியைப்போல அவள் மூளையில் சென்று தாக்கின. அந்த அதிர்ச்சியில் அவள் தலை கிறங்கியது. ஒரு கணம் மதிமயங்கிப்போய், பித்துப் பிடித்தவள்போல நின்றாள்.

"உன் அம்மா எவ்வளவு முன்னெச்சரிக்கை அற்றவள்! வன்மங்கொண்ட எதிரியின் கொலைக் கரங்களில் உன்னை எறிந்துவிட்டாளே!"—வைதியின் குரல் அது. அதிலே கலந்தொலித்த சிரிப்பு...சிரிப்பல்ல, சூழ்ச்சிக்காரனின் எக்களிப்பாகவே தோன்றியது அவளுக்கு. அது அவள் உள்ளத்தில் கொதிப்பூட்டியது.

என்ன நன்றிகொல்லும் தனம்! சாகும் தருவாயிலும்கூட சூழ்ச்சிதானா? தன் மீது அனுதாபம் காட்டிய ஒருத்தியின் குற்றமறியாக் குழந்தையையா கொல்ல நினைத்தது அந்த பாவ உள்ளம்? அவள் நெஞ்சில் ஆத்திரமும் அருவருப்பும் சீறிப் பொங்கின. அப்போது வீசிய நினைவுப் புயலிலே அவள் இதயத்தின் கொந்தளிப்பு வேகம் அடைந்தது.

அவளால் எப்படி மறக்கமுடியும்?

பலமாக விலங்கிடப்பட்டு அந்தக் கைதி அவர்களது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டது ஒருசில நாட்களுக்கு முன்பு தான். முதல் முதல் பார்த்தபோது அந்த முஸ்லிம் கைதியின் மீது அவளுக்கு ஏனோ ஒருவித பச்சாதாபம் ஏற்பட்டது. தன் வீட்டார் கைதிக்கு இழைத்த கொடுமைகளைக்கண்டு பரிதாபப்பட்டாள்.

ஒரு நாள் கைதியின் வேதனை நிரம்பிய முனகல்களைக் கேட்டு அவள் மனம் வெகுவாக இளகியது. அக்கம் பக்கம் பார்த்தாள். மற்ற பெண்டிர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள். எவரும் கவனியாத முறையில் கைதியிடம் வந்தாள்.

"கைதியே! உன் நிலைமையைக் கண்டு இரங்குகிறேன். ஏதோ என்னால் முடிந்த உதவியைக் கேள், செய்கிறேன்" என்றாள், அனுதாபம் தோய்ந்த மெல்லிய குரலிலே.

"ஒன்று செய்வாயா, அம்மா? எனக்கு அவர்கள் மரண தண்டனை அளிக்கப்போகும் நேரத்தைத் திட்டமாகத் தெரிந்து சொல்லவேண்டும்."

"எப்படியும் தெரிந்து சொல்கிறேன். வேறு ஏதாவது விருப்பம் உண்டா?"

"ஒரு கத்தி கொண்டுவந்து தரமுடியுமா? சவரம் செய்துகொள்ள வேண்டும்."

கைதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அது மயிர்க்காடாக இருந்தது. கைதியின் பேச்சில் எவ்வித சூழ்ச்சியும் இருந்ததாக அவளுக்குத் தோன்றவில்லை.

'பாவம்! இறக்கப்போகும் அவருக்கு இந்த உதவியாவது செய்வோம்'—என்று அவள் உள்ளம் சொல்லியது.

"ஆகட்டும்," என்று சொல்லி வந்தாள்.

ஏதோ எதிர்பாராத வேலையின் நிமித்தம் பின்தங்க நேரிட, எவருக்கும் தெரியாமல் தன் குழந்தையிடம் கத்தியைக் கொடுத்தனுப்பினுள். இரக்கம் கொண்டிருந்த நிலைமையில் அவள் உள்ளத்தில் எவ்வித சந்தேகமும் எழவில்லை.

இப்போதோ...?

கைதியின் முகமயிர் அகற்ற அனுப்பிய கத்தி தன் பெண் மகவின் உயிரைக் குடிக்க அல்லவா இருந்தது!

கூச்சலிட்டு வீட்டாரை அழைக்க எண்ணினுள். மறுகணம் ஏதோ உள்ளுணர்வு அவளைத் தடுத்தது. தன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் பாதகம் இல்லை, பிள்ளையைக் கைதியின் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டுமே என்ற கவலையில் ஓடோடினுள்.

இதோ, முற்றவெளியைத்தாண்டி சிறை அருகே வந்துவிட்டாள்!

அங்கே அவள் கண்ட காட்சி...

கைதி குழந்தையை வாரி அணைத்து, உச்சி முகர்ந்து கொஞ்சிக் கொண்டிருந்ததைப் பார்த்தாள் அவள்!

'கொஞ்சுவதாகக் காட்டிப் பிறகு குழந்தையைக் கொன்றுவிடும் சூழ்ச்சியோ என்னவோ, யார் கண்டார்கள்!'

இல்லாவிடில், "எதிரியின் கொலைக் கரங்களில் எறிந்துவிட்டாளே!" என்று கைதி சொல்லவேண்டிய காரணம்?

அவள் மனதில் ஏற்பட்டிருந்த கலவரத்தில் எதையும் நிதானிக்க முடியவில்லை.

கைதியின் அருகில் கிடந்த அந்தக் கத்தியை எப்படியாவது அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று அவள் உள்ளம் அங்கலாய்த்தது.

கத்தியை எடுக்கப் பாயலாமா என்று அவள் நினைத்த நேரம், கைதியின் பார்வை அவள்மீது பட்டது. அவள் முகம் அவளது அகத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அதை உணர்ந்துதான் என்னவோ கைதி அவளைப் பார்த்துச் சிரித்தார்.

ஆம், ஒரு தாயின் பேதை உள்ளத்தை நினைத்துத்தான் புன்முறுவல் செய்தார் அவர்.

குழந்தையைத் தூக்கித் தன்னுடைய நெஞ்சிலே அணைத்துக்கொள்ள அந்தத் தாயின் கரங்கள் நீண்டன.

அந்தக் கரங்களிலே குழந்தையை எடுத்து வைத்தவராக, கைதி சொன்னார்:

"அம்மா! சற்றுமுன் நான் சொன்னதைக் கேட்டு பயந்துவிட்டாய் போலிருக்கிறது. என்னைக் கொடுமைப்படுத்தும் மனிதர்களிடையேயும் உன்னைப் போல் அன்புகாட்டும் ஒரு பெண்ணைக் கண்டதால் எனக்கு ஏற்பட்ட வாய்ப்பைத்தான் அப்படி வேடிக்கையாக வெளிக்காட்டினேன். அதுவன்றி பெரியவர்கள் செய்த குற்றத்துக்குப் பிள்ளையின்மீது வஞ்சம் தீர்க்க நினைக்கும்பேதை அல்ல நான். என்மீது அனுதாபம்கொண்ட உனக்கு வேதனை தர எனக்கு எப்படி மனம் வரும்? அதிலும் காரணமில்லாமல் ஒரு குழந்தையை ஏமாற்றிக்கொல்ல நான் மட்டுமல்ல, எந்த முஸ்லிமும் விரும்புவதில்லை. ஆம், இஸ்லாத்தில் நயவஞ்சகத்துக்கு இடமில்லை, பெண்ணே!"

அதைக் கேட்ட அந்தப் பெண் தன் செய்கையை நினைத்து வெட்கப்பட்டு, தலைகுனிந்து நின்றாள்.

உணர்ச்சிப் பெருக்கிலே வார்த்தையெதுவும் வெளி வரவில்லை. மௌனமாக அங்கிருந்து சென்றான்.

'இஸ்லாத்தில் நயவஞ்சகம் இல்லை'—அந்த வார்த்தைகள் அவள் உள்ளத்தில் எதிரொலிக்க, அவளைப் போலவே பழைய மார்க்கத்தை விடாதுபற்றி நின்ற ஒரு கூட்டத்தின் நய வஞ்சகச்செயல் அந்தக் கைதியின் நினைவில் எழுந்தது...

மதீனாவிலிருந்து அவர் எவ்வளவு நம்பிக்கையுடனும் ஆவலுடனும் புறப்பட்டார்! அப்போது அவர் மக்காவிலே தாம் எதிரிகளின் கைகளிலே சிக்கித் துன்புறுவோம் என்று கிஞ்சிற்றும் நினைக்கவில்லை. நபியவர்களின் ஆசியுடன், ஒரு நல்ல காரியத்துக்குப் புறப்பட்ட நிலையில் அந்த நினைவு எழ மார்க்கம் ஏது?

ஹஜ்மா வர்க்கத்தாரிடமிருந்து அண்ணல் நபியவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வந்தது.

"எங்களில் ஒரு சிலர் இஸ்லாத்தைத் தழுவியிருக்கிறோம். இன்னும் பலர் முஸ்லிமாக விரும்புகிறோம். இஸ்லாத்தைப்பற்றியும் குர் ஆனைப் பற்றியும் நல்லபடி எடுத்துச் சொல்ல திறமையான போதகர்கள் எங்களிடம் இல்லை. உங்கள் தோழர்களில் ஒரு சிலரை அனுப்பிவைத்தால் நலமாக இருக்கும்" என்பதுதான் அந்த வேண்டுகோள்.

அதைப் பெருமானார் அவர்கள் பெருமனதுடன் ஏற்றார்கள்.

அதன் விளைவாக, ஆஸிம் பின் தாபிது என்பவரின் தலைமையில் சார்ரா, அலுல் என்னும் பகுதிகளை நோக்கிச்சென்ற ஒன்பது தோழர்களில் ஒருவராக இருந்தார் குபைப் இப்னு ஐது என்ற அவர்.

வள்ளல் நபியவர்களின் போதனைகளை அறிந்து மற்றவர்களும் நல்ல பயன்பெற வேண்டும்—இஸ்லாமியச் சுடர் மக்கள் உள்ளங்களிலே ஒளியிட வேண்

டும் என்பதில்தான் அவருக்கு எத்தனை ஆர்வம்! மனத்திலே எவ்வளவோ நினைத்துப்போனார்.

மதீனாவிலிருந்து புறப்பட்ட ஒரு சில தினங்களில் முஸ்லிம் பிரச்சாரக் குழுவினர் ரஜீஃ என்ற இடத்தை அடைந்தனர். அங்கே மதபோதனை விரும்பியவர்கள் மதங்கொண்டவர் ஆயினர். அறநெறி கேட்டு வந்தவர்கள் மறநெறி காட்டி நின்றனர். முஸ்லிம் தோழர்களை அழைத்து வந்த அந்தக் கூட்டத்தினர் தங்களை நம்பி வந்த அவர்களைத் தாக்கிக் கொன்றுவிடுமாறு லஹ்யான் வர்க்கத்தினரைத் தூண்டிவிட்டனர்.

ஆகவே, நூறு வில்வீரர்களும் இருநூறு போர் வீரர்களுமாக முந்நூறு 'காபிர்'கள் அந்த பத்து முஸ்லிம்களைச் சூழ வந்தனர்.

அதையறிந்த முஸ்லிம் தோழர்கள் அருகில் இருந்த ஒரு குன்றின்மீது ஏறிக்கொண்டனர்.

அவர்களை நோக்கி, "உங்கள்மூலமாக மக்காவாசிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதே எங்கள் எண்ணம். நீங்கள் கீழே இறங்கிவாருங்கள். உங்களுக்கு நாங்கள் அபயம் தருவோம். எங்களால் உங்கள் உயிர்களுக்கு ஆபத்து இல்லை" என்று வில்வீரர்கள் கூறினார்கள்.

"நான் குப்பார்களிடம் அடைக்கலம் புகவர மாட்டேன்" என்று முஸ்லிம்களின் தலைவரான ஆஸிம் அஞ்சாது பதில் உரைத்தார். பிறகு வானத்தை நோக்கியவராக "யா அல்லாஹ்! எங்களுடைய இக்கட்டான இந்தச் செய்தியை நீயே உன் ரசூலுக்கு அறிவிப்பாயாக" என்றவராக, கையிலே வாளெடுத்தார். ஏழு தோழர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.

"சரணடைந்து விடுங்கள். அல்லது, வீணாகச் சண்டையிட்டு மடியுங்கள்" என்றனர் அந்த மறவர்

கள், வாளேந்தி வந்த வீரமுஸ்லிம்களிடம். இருந்தும் அந்த எழுவரும் முன்னேறி வந்தனர். நடந்த சண்டையிலே வீர சுவர்க்கம் புகுந்தனர்.

குன்றின்மீது நின்றுகொண்டிருந்த குபைபும், ஜைதும் 'குப்பார்'களின் வஞ்சக மொழிகளை நம்பிவிட்டனர். கீழே இறங்கிவர, ஏமாற்றம் அவர்களுக்காகக் காத்திருந்தது. தூண்டிலைப்போட்டு மீன்களைப் பிடித்துவிட்டனர் எதிரிகள்!

பிடிபட்ட குபைபும் ஜைதும் விலங்கிடப்பட்டவர்களாக குறைஷிகளின் கோட்டையான மக்காவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களை யாரிடம் காட்டிப் பணம் பறிக்கப்போவதாகச் சொன்னார்களோ, அதே குறைஷிகளிடம் அவ்விரு கைதிகளையும் விலைக்கே விற்றுவிட்டனர் அந்த நய வஞ்சகர்கள்.

ஸப்வான் இப்னு உமையா என்பவன் ஜைதை விலைக்கு வாங்கிச்செல்ல, ஹாரித் இப்னு ஆமிரின் புதல்வர்கள் குபைபை வாங்கிச் சென்றார்கள். அதிகமான விலைகொடுத்து வாங்கி, அவரை ஆரவாரமுடன் தங்கள் வீட்டுக்கு இட்டுச் சென்றார்கள்.

வீட்டிலே வெறும் அடிமையாக வைத்திருக்க அவரைக்கொண்டு போகவில்லை. தங்களின் நெடுநாளைய எண்ணத்தை நிறைவேற்றவே அவ்வாறு செய்தனர். தங்கள் தந்தையின் மரணத்துக்கு பழி வாங்குவதே அவர்கள் நோக்கமாக இருந்தது. உஹுத்போரில் குபைபின் வாள் வீச்சிலேபட்டு மடிந்தான் ஹாரித். ஆகவே, அவரை மிகக் கொடுமை செய்து பகிரங்கமாகக் கொல்ல நினைத்தனர் அவன் பிள்ளைகள்.

பலமாக விலங்கிட்டு, வெளியறை ஒன்றில் அவரைத் தள்ளினர்.

குபைபுக்கு அவர்கள் சொல்லவொண்ணாத கொடுமைகள் புரிந்தனர். நாள் தவறாமல் அவரைப் பல விதமாகச் சித்திரவதை செய்தனர். கொல்லாமல் கொன்றனர். அளவுமீறிய வேதனை தாளாத நிலையில், கற்சுவர்களும் கரையும்படி எத்தனையோ முறை குபைப் ஓலமிட்டிருக்கிறார்...

அப்படிப்பட்ட அரக்கர்களின் மத்தியிலும்கூட தன் இனத்தவரின் ஒரு எதிரியான தம் மீது இரக்கம் கொண்டு, தமக்கு ஆறுதல் சொல்ல முன் வந்த அந்த நல்லவள் போகும் திசையைப் பார்த்துக்கொண்டிருந் தார் கைதி.

தம்மால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற் படலாம் என்று அஞ்சி அவள் எப்படி உடல் பதை பதைக்க வந்தாள்! ஆனால் அவள் பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. மகவை உயிருடனே தன்னுடன் அழைத் துச் சென்றாள் அவள். தாம் விரும்பியிருந்தாலும்கூட, குழந்தைக்குச் சாவு ஏற்பட்டிருக்க முடியுமா? யாரும் ஒருவருக்கு மரணம் எவரால், எப்படி, எப்போது நேரும் என்பதை மனிதரால் திட்டவட்டமாகச் சொல்லமுடியுமா? நடப்பதெல்லாம் ஆண்டவன் நாட் டப்படிதான் நடக்கும். எல்லாம் அறிந்தவன் அவனே தான்.

ஆனால், மனிதர்கள் திட்டமாக அறிந்த ஒன்று இருப்பதானால், அது பிறப்புக்குப்பின் இறப்புண்டு என்ற உண்மையே ஆகும் அன்றோ? அந்த இறப்பின் பயத்தை முஸ்லிம்கள் மறுமையின் நல்வாழ்வை யெண் ணியே தம் நெஞ்சில் கொண்டிருப்பார்கள். அல்லாது, மரணத்தைப்பற்றி அஞ்சி, அஞ்சி சாகமாட்டார்கள் அல்லவா?

இவ்விதமான சிந்தனைகள் குபைபின் மனதுக்கு நிம்மதியை அளித்தன.

அதே நிம்மதிதான் சிறையிலிருந்து அவர் ஊருக்கப்பாலிருந்த திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும் அவருடைய முகத்தில் தவழ்ந்தது.

மனத்தில் எவ்வித சலனமுமின்றி அமைதியுடன் மரணத்தை ஏற்பதற்கு நின்றார்.

"கைதியே! உன் இறுதி விருப்பம் என்ன?" என்ற கேள்வி அவரை நோக்கி வீசப்பட்டது.

"இறக்குமுன் என் கடைசிப் பிரார்த்தனையை நிறைவேற்றிக்கொள்கிறேன்" என்றார் கைதி.

உத்திரவு தரப்பட்டது. கைதியின் கைகளைப் பிணைத்திருந்த விலங்குகள் நீக்கப்பட்டன.

"அல்லாஹூ அக்பர்!" என்று தக்பீர் சொல்லி, தொழ ஆரம்பித்தார் குபைப். சூழ்ந்து நின்ற கொடியவர்களை மறந்தவராக, ஏக நாயனை நெஞ்சார வணங்கினார். இரண்டு ரக்அத்திலே தொழுகையைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு, எழுந்து நின்றார்.

சாந்தம் ததும்பிய அவர் கண்கள் கூடி நின்றவர்களைச் சுற்றி ஒரு முறை வட்டமிட்டன.

"மரண வாயிலில் நிற்பவன் நான். என் நிலையில் இருக்கும் ஒருவன் நீண்ட நேரம் தொழுது, இறைவனிடம் துஆ இறைஞ்சுவதையே விரும்பி இருப்பான். ஆனால் நான் இறுதிப் பிரார்த்தனையை சீக்கிரத்தில் முடித்துக்கொண்டேன். உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். சாவதற்குப்பயந்துகொண்டு நான் தொழுகையை நீடிப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாதே என்றுதான் அதைச் சுருக்கமாக முடித்துக்கொண்டேன்" என்று சொன்னார் அவர், மரண தண்டனையை எதிர்நோக்கியவராக.

அப்போது குறைஷிகளின் தலைவன் ஒருவன் அவரை நோக்கி "இன்னும் காலம் தாழ்ந்துவிட வில்லை. இஸ்லாத்தைக் கைவிட்டு மீண்டும் எங்கள் மார்க்கத்துக்கு வந்துவிடும். அதனால் வாழ்வதற்கு மீண்டும் ஒரு தவணை பெறலாம்" என்றான்.

"வாழ மீண்டும் ஒரு தவணையா? அதை உங்களிடமா பெற வேண்டும்! அவரவர் உயிர் வாழ்வதற்கான தவணைகளை அல்லாஹ் ஒருவனே தருகிறான். மனிதருக்கு உயிரளிக்கும் அவனேதான், நாடியபொழுது அதை எடுத்துக்கொள்கிறான். அவன் நாட்டத்துக்கு முன் மனிதர்களால் என்ன செய்ய முடியும்? உங்களைப்போல நான் இன்னும் குருடன் அல்ல. அல்லாஹ்வின் அருளாலும், அவனது ரசூலின் உதவியாலும் கண்பார்வை பெற்றுவிட்டேன். அதை மீண்டும் இழக்க வேண்டுமா?

"இஸ்லாத்தைக் கைவிட்டு உயிருடன் இருப்பதைவிட, ஒரு முஸ்லிமாக இறப்பதே நன்று. இவ்வுலக வாழ்வு அழிவது. ஆனால் மறுமையின் வாழ்வோ நிலையானது. அந்த நல்வாழ்வுதான் எனக்கு வேண்டும். அதற்கான வழிதான் இஸ்லாம்" என்றார். அவரது குரலிலே நம்பிக்கையின் உறுதி ஒலித்தது.

குபைபின் பேச்சு அங்கு திரண்டு நின்ற வஞ்சக நெஞ்சினர்களை வெஞ்சினம் கொள்ளச் செய்தது.

"கொல்லுங்கள்!" என்ற பலகோபக் குரல்கள் ஏககாலத்தில் எழுந்தன.

"இஸ்லாத்தின் பொருட்டு கொல்லப்படும்போது, எந்தவிதமாகக் கொல்லப்படுகிறேன் என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் கவலையில்லை. நான் கொல்லப்படுவதெல்லாம் அல்லாஹ்வுக்காக இருக்கும். அவன் நாடினால், என் உடம்பின் ஒவ்வொரு சிறு பகுதியின்மீதும்

அவன் தனது கருணைமாரியைப் பொழிந்தருள்வான்” என்ற கருத்துப்படும் கவிதையொன்றைக் கூறினர், மலர்ந்த முகத்துடன்.

அதனல் ஆவேசமுற்ற எதிரிகள் எய்த ஈட்டிகளும் தொடுத்த அம்புகளும் குபையின் நிமிர்ந்த மார்பிலே வேகமுடன் பாய்ந்தன. அவை பட்டுத் துளைத்த இடங்களில் இரத்தம் பீறிட்டது.

“அல்லாஹ்!” என்ற அழகிய திருநாமத்தை உச்சரித்தவண்ணம் கீழே சுருண்டுசரிந்து விழுந்தார் குபைப். மரணவேதனையிலே அவர் உடல் ஒரு கணம் தரையில் உருண்டுபுரண்டது. மறுகணம் கண்ணிமைகள்மூட, அவர் உயிர் துறந்தார். அல்ல, உடல் துறந்தார். உண்மை மார்க்கத்திற்காக உயிர்விடும் அவர் போன்ற தியாகி இறப்பதில்லையே! இறந்தும் இறவாதவரன்றோ அவர்?

நேர்மையின் அழகு

அன்பைப் போதித்த அண்ணலாரது அடியார்களின் உள்ளங்களிலே ஆத்திரம் கொழுந்துவிட்டு எரிந்தது.

'பகைவனுக்கும் அருள்வாய்' என்று இயம்பும் பணிவு மார்க்கத்தைச் சேர்ந்தோர் "பழிக்குப்பழி" என்று முழங்கினர்.

கருணை வடிவான உத்தமோத்தமரின் உருவச் சிலையின் நிழலிலே கனல் தெறிக்கும் பேச்சுக்கள் அம்புச் சரங்கள்போல் அடுத்தடுத்துக் கிளம்பின.

அன்புக்குப் பதில் ஆத்திரம்—பணிவுக்குப் பதில் பழி நினைவு—கருணைக்குப் பதில் கனலிடும் சொற்கள்! ஆம், அவைதாம் சதுக்கத்தில் கூடியிருந்த கிறிஸ்தவர்களின் உள்ளங்களிலும் உதடுகளிலும் பீறிட்டன.

அதற்குக் காரணம் இருந்தது.

நகரின் மத்தியிலே ஒரு சதுக்கம்; அதன் நடுவே அழகுற நின்றது, பளிங்குச்சிலை ஒன்று. அடியார்களை ஆசீர்வதிக்கும் முறையில் அதன் கரங்கள் உயர்த்தப்பட்டு இருந்தன. அவர்களைக் கனிவுடன் நோக்கும்

பாவனையில் ஒருசாய்த்துக் குனிந்திருந்தது அதன் அன்பு ததும்பும் முகம். மாசு மருவற்ற சலவைக் கல்லிலே ஏசுநாதரின் உருவத்தை உயிரோவியமாகச் செதுக்கியிருந்த சிலை அது.

நேற்று மாலைவரை எழிலுடன் நின்றது.

ஆனால் இன்றோ...?

அதைப் பார்ப்பவர் அன்பை மறந்து வஞ்சம நினைந்து, பொங்கியெழும் அளவுக்கு அது பங்கப்பட்டிருந்தது.

இரவின் இருள் மறைவிலே எவரோ அதன் அழகுருவைச் சிதைத்து விட்டிருந்தனர்.

பொழுது விடிய, கீழ்வானில் படர்ந்த செங்கதிரைப்போல் அச் செய்தி கிறிஸ்தவர் வாழ்ந்த பகுதியெல்லாம் பரவியது.

உடல் துடிக்க, உள்ளம் பதைபதைக்க ஓடிவந்தனர். சிலைக்கு நேர்ந்த கோரத்தைக்கண்டு திடுக்கிட்டனர். நெஞ்சம் கொதித்து நின்றனர்.

அவர்களது கண்முன்னே, சிலை மூக்கிழந்து, மூளியாகக் காட்சியளித்தது.

பக்தி சிரத்தையோடு அவர்கள் போற்றி வந்த சிலைக்கா அந்தக் கேடு? இல்லை, அவர்களது நெஞ்சங்களில் நிறைந்திருந்த ஏசுவின் அன்புருவத்திற்கா அந்த அலங்கோலம்—அவமானம்?

"என்ன கொடுமை இது!"

"நம்மவர் ஆட்சியானால், இப்படி நடந்திருக்க முடியுமா? நடந்துவிட்டாலும், குற்றவாளியை இதுவரை சும்மா விட்டிருப்போமா? அவனைச் சுட்டுப் பொசுக்கி இருக்க மாட்டோமா?

—பல, பல கண்டன அலைகள், உணர்ச்சிப் புய லில் கொந்தளித்த கிறிஸ்தவர்களின் உள்ளக் கடலி லிருந்து ஆவேசமுடன் பாய்ந்தெழுந்தன.

"ஆளுவோரின் ஆட்சி நேர்மைக்கு என்ன அரு மையான எடுத்துக்காட்டு!"

"வெற்றி வெறியிலே இதுவும் செய்வார்கள்; இதற்கு மேலும் செய்வார்கள்!"

"இதுபோல் இனியும் நடக்காமல் இருக்க, இப் போதே அணைபோட வேண்டும்! இல்லாவிடில், கிறிஸ் தவர்கள் என்று நாம் வெளியில் சொல்லிக்கொள்ளவும் அஞ்சும் காலம் வந்துவிடும்."

"பழிக்குப் பழி—பதிலுக்குப் பதில் வாங்கியே தீர வேண்டும்!"

—சீற்றத்தின் உச்ச நிலையிலே பல தலைவர்கள் அடுத்தடுத்துப் பேசினார்கள். புற்றிலிருந்து கலைக்கப் பட்ட கட்டெறும்புகளின் கடியைப்போல் கடுத்தன, அவர்களது வார்த்தைகள்.

எல்லோரையும் நோக்கிக் கையமர்த்தினார் உள் ளூர் பாதிரியார்.

"எந்த நிலைமையிலும் நாம் பொறுமையை இழந்து விடக்கூடாது. கட்டுப்பாடு மீறாமல் இருக்க வேண் டும். நாம் எல்லோரும் விரும்புவது என்ன? இரவு நடந்த பாவத்துக்கேற்ற பரிகாரம் காண வேண்டும். குற்றத்துக்குச் சரியான தண்டனை கிடைக்க வேண் டும், இல்லையா? சந்தர்ப்பம், சூழ் நிலைகளை அனு சரித்து, காரியம் உருவாக நடக்கும் வழியை நாம் யோசிக்க வேண்டும். அதற்கு நாம் ஆத்திரப்படாமல், நிதானமாக நடந்துகொள்வது அவசியம்" என்றார்.

அவரது பேச்சுக்குக் கூட்டத்தினர் உடனே கட்டுப்பட்டனர்.

அதன் பின்னர் அமைதியாக நடந்த ஆலோசனையின் பயனாக, பாதிரியாரின் தலைமையில் கிறிஸ்தவரின் தூதுகோஷ்டியொன்று நாட்டின் காவலரை நேரே கண்டுபேசப் புறப்பட்டது.

அப்போது எகிப்தின் ஆட்சிபீடத்திலே அமர்ந்திருந்தார் அம்ரிப்னுல் ஆஸ்.

ஸிரியாவிலிருந்து பின்னடைந்த ரோமர்கள், எகிப்தின் தலைநகரான அலெக்ஸாந்திரியாவில் தங்களது இறுதி எதிர்ப்பணியை நிறுத்தினர்கள். வெள்ளம் போல் விரைந்த அராபியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த அங்குதான் அவர்களது சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி நின்றனர்.

ஆனல், வாழ்வில் தோல்வியே கண்டறியாத வீராதி வீரரான அம்ரிப்னுல் ஆஸ் கிறிஸ்தவர்களின் ஒருமித்த வலிமையை நசுக்கி, அவர்களை வெற்றி கொண்டார். கைப்பற்றிய நாட்டின் நிர்வாகத்தைத் தாமே ஏற்றுக்கொண்ட அவர், வள்ளல் நபியவர்களின் வழியிலே, உத்தம கலீபாக்களின் அடிச்சுவட்டிலே, அங்கு சுத்த இஸ்லாமிய ஆட்சி நிலவுவதை விரும்பினர். அதனல்—

"மத விஷயத்தில் பலவந்தம் இல்லை", "அவரவருக்கு அவரவர் கூலி கிடைக்கும்"—என்ற இறைமறையின் திருவசனங்களுக்கேற்ப நாட்டில் வாழ்ந்த முஸ்லிம் அல்லாதவர் அனைவருக்கும் மத விஷயங்களில் பூரண சுதந்திரம் வழங்கப் பட்டிருந்தது.

ஆகவே, தம்மைப் பார்க்க வந்த பாதிரியாரையும் அவரது சகாக்களையும் மரியாதையாக வரவேற்ருர் அம்ரிப்னுல் ஆஸ். அன்புடன் அவர்களுக்கு ஆசனமளித்து, உட்காரச் செய்தது வந்தவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"விஷயம் என்ன? சொல்லுங்கள்!" என்று வந்திருந்தவர்களைப் பரிவுடன் கேட்டார் அமீர்.

பாதிரியார் விஷயத்தை நேரடியாகவே கூற ஆரம்பித்தார்.

"எங்கள் மதத்தவரின் உள்ளங்களைப் புண்படுத்தும் சம்பவம் நடந்திருக்கிறது. தலைமுறை தலைமுறையாக நாங்கள் போற்றி வரும் ஏசுவின் புனிதச் சிலையை எவரோ ஈனப்படுத்தி விட்டனர். மூக்கைப் பெயர்த்து, முகத்தைப் பங்கப் படுத்திவிட்டனர். அதனால் எங்கள் மக்களிடையே பெருத்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கான பரிகாரம் தேடியே, உங்களிடம் வந்திருக்கிறோம்" என்றார்.

"நீங்கள் சொன்னதைக் கேட்டு மிகவும் வருந்துகிறேன் இவ்வித இழிவான செயல் நடந்திருப்பது அவமானமாகத்தான் இருக்கிறது. ஆம், இதை யார் தான் செய்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?"

"யார் செய்திருப்பார்? சிலை உருவங்களை வெறுக்கும் ஒரு மதத்தவர் தான் செய்திருக்க வேண்டும்!"

பாதிரியாரின் உட்கருத்தைப் புரிந்துகொள்ள அதிக நேரம்பிடிக்கவில்லை, அமீர்ப்னுல் ஆஸுக்கு மத உணர்ச்சி அளவு மீறிய நிலையில், யாரோ ஒரு முஸ்லிம் செய்திருக்கலாம் என்றுதான் அவர் மனத்துக்கும் பட்டது.

"அப்படியா சொல்கிறீர்கள்? சிலை ஆராதனையை இஸ்லாம் கண்டிக்கிறது என்பது உண்மையே. ஆனால், அதற்காக முஸ்லிம் அல்லாதவரின் தெய்வங்களை நிந்தனை செய்யும்படியோ இழிவு படுத்தும்படியோ எங்கள் மார்க்கம் சொல்லவில்லை. எங்களது பெருமானார் அவர்களும் போதிக்கவில்லை. எப்படியோ தவறு நடந்துவிட்டது. அதற்குப் பரிகா

ரம் செய்ய வேண்டியது அவசியம்தான். ஆகவே, பழுதுபட்ட சிலையைச் செம்மை செய்து கொள்ளுங்கள். செலவு முழுவதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்றார் அமீர்.

" அது சாத்தியப்படாது. பளிங்குச் சிலை ஆயிற்றே, உடைந்த பகுதியில் புதிய மூக்கை எப்படி ஒட்டுச் சேர்ப்பது?" என்று கேட்டார் பாதிரியார்.

" அப்படியானல் புதிதாகவே ஒரு சிலையைச் செதுக்க ஏற்பாடு செய்யுங்கள். என்ன செலவானுலும் நான் தருகிறேன்."

"இதற்கும் நாங்கள் சம்மதிக்க முடியாது. புதுச் சிலை அமைத்துவிட்டால் மாத்திரம், புண்பட்ட எங்கள் மனங்கள் இதம் அடைந்துவிடுமா? எங்கள் மத உணர்ச்சிக்கு ஏற்பட்ட அவமானம் நீங்கிவிடுமா? ஏசுவை நாங்கள் எப்படிக் கருதி வருகிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். பரமபிதாவின் பரிசுத்த குமாரர் அல்லவோ அவர்! அவருடைய புனிதமான உருவச் சிலைக்கு நேர்ந்த அவமதிப்பைக் கேவலம் அற்ப பணம் ஈடுசெய்ய முடியுமா?" என்று பாதிரியார் உணர்ச்சி பொங்கக் கேட்டார்.

"ஈடுசெய்ய வேறு என்னவழி தான் இருக்கிறது? உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள்" என்று பணிவாகவே சொன்னர் அமீர்.

"இருக்கிறது, நிச்சயமாக இருக்கிறது" என்று சொல்லிய பாதிரியார் சற்றுத் தயங்கினர்.

"இருக்கிறதா? சொல்லுங்கள்! என்ன தயக்கம்?" என்று அமீரின் ஆஸ் பாதிரியாரைத் தூண்டினர்.

"உங்கள் நபிநாதருடைய சிலையை வடித்து மூக்கை உடைத்துவிடுகிறோம்!" என்றார் பாதிரியார், வெகு துணிச்சலுடன்.

அஸ்தஃபிருல்லாஹ்! என்ன பயங்கரமான சொல். உயிரினும் இனியரான பெருமானருக்கா அந்த இழுக்கு? அப்பப்பா! அதை நினைத்தாலும் நெஞ்சு அழுகிவிடும்; கேட்டாலும் காது அழுகிவிடுமே!

வானம் இடிந்து, பூமி பிளக்கும் ஊழியின் பயங்கர ஆட்டம் அம்ரிப்னுல் ஆஸின் உடலையும் உள்ளத்தையும் குலுக்கியது..

அவரது இரத்த நாளங்கள் உஷ்ணமேறிப் புடைத்தன. அனலில் இட்ட பொன்னென அவர் முகம் தகதகத்தது கண்கள் சிவப்பேறின. கோபத்தினல் தேகம் சிலிர்த்து நடுங்கியது. உதடுகள் இறுகின. துடிக்கும் அவரது கரம் அடிக்கடி உடைவாள்மீது சென்றது. மீண்டும் மீண்டும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார் அவர்.

அந்த நிலையில் பாதிரியார்மீதும் அவரது சகாக்கள் மீதும் தமது கண்களைச் சுழலவிட்டுக் கொண்டிருந்தார் அம்ரிப்னுல் ஆஸ். அவரது பார்வையிலே கிறிஸ்தவக் குழுவினர் மருண்டனர். 'என் சொன்னேம்?' என்றாகிவிட்டது பாதிரியாருக்கு. காவலரின் கோபத்தைக் கண்ட அவர்களுக்கு உள்ளூறத் திகில்தான். ஆனாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. 'உள்ளதாகட்டும்' என்ற பாவனையில் ஒன்றும் பேசாதிருந்தார்கள்.

ஆசனத்தைவிட்டு 'விருக்'கென்று எழுந்தார் இபுனுல் ஆஸ். புண்பட்ட புலிபோல இங்கும் அங்கும் உலாவினர். கணநேரம் யோசனையில் நின்றவர், உள்ளே சென்ருர். குளிர்ந்த தண்ணீரால் முகத்தைக் கழுவிக்கொண்டார், மீண்டும் வெளியே வந்தபோது, அவரது ஆக்கிரம தணிந்திருந்தது. ஆசனத்தில் அமைதியாக வந்து அமர்ந்தார்.

"மன்னிக்க வேண்டும்!" என்று பேச்சைச் சாந்

தமாக ஆரம்பித்தபோதிலும், அவரது குரலிலே வேதனை தோய்ந்திருந்தது.

"உங்களுக்கு ஏற்பட்டுள்ள மன வேதனை பெரிது தான். நான் அதை நன்கு உணர்கிறேன். ஆனாலும், அந்த வேதனை தீர எங்களது நன்னபியின் சிலையையா வடிக்க வேண்டும்? ஓயாது ஒழியாது பிரச்சாரம் செய்து உருவ வழிபாட்டை ஒழித்த அந்த உத்தமத் திருநபிக்கா சிலை! ஆண்டவனுக்கு இணை வைப்பதை நிறுத்திய எங்கள் அல்லாஹ்வின் தூதருக்குத்தானு சிலைவடிக்க வேண்டும்! வடித்தபின், எங்கள் கண்கள் முன்னே அதன் மூக்கை உடைத்து அவமதிக்க வேண்டுமா? அதைக் காண்பதைவிட எங்கள் கண்கள் அவிந்து போகட்டும். எங்கள் சொத்து, சுதந்தரங்கள், பெண்டு, பிள்ளைகள் மண்ணோடு மண்ணாக மறைந்து போகட்டும். ஏன், எங்கள் உயிர்களே அழிந்து ஒழியட்டும். நிச்சயமாக, விசுவாசிகளுக்கு அவர்களுடைய உயிர்களைவிட நபியவர்கள் தாம் பிரதானமானவர்கள். ஆகவே, உங்களது விபரீத யோசனை வேண்டாம்!" என்றார். உணர்ச்சிப் பெருக்கு அவரது குரலைக் கர கரக்கச் செய்திருந்தது.

நீர்த் திரையிட்ட கண்களுடன் பாதிரியாரையும் அவருடன் வந்திருந்தவர்களையும் நோக்கினார். அவர்கள் மௌனமாக இருந்ததைக் கண்டு, தாமே பேச்சைத் தொடர்ந்தார் அம்ரிப்னுல் ஆஸ்.

"குற்றத்திற்கான பரிகாரம் தானே உங்களுக்கு வேண்டும்? சற்றுமுன் சொன்னதைவிட்டு வேறெதையும் கேளுங்கள். நிறைவேற்றச் சித்தமாக இருக்கிறேன். சிலையின் மூக்கு சிதைக்கப்பட்டதற்குப் பதிலாக எங்களில் எவருடைய மூக்கை வேண்டுமானுலும் சிதைத்துக் கொள்ளுங்கள். சரிதானே?" என்று உருக்கமுடன் கூறினார்.

பாதிரியார் உடனடியாக எதுவும் பதில் சொல்லவில்லை. கூட வந்திருந்தவர்களைப் பார்த்தார். அவர்களது கண்கள் அவரிடம் பேசின.

'நடந்த தவறுக்கான பரிகாரம்தானே நாம் நாடி வந்தது? நாம் ஆளப்படுபவராகயிருந்தும், நாடாளும் காவலர் நம்மைக் கெஞ்சும் நிலையில் கேட்டும்கூட, வீண் பிடிவாதம் செய்தால், நிலைமை மிஞ்சிவிடக் கூடும். காரியம் எல்லாமே கெட்டுவிடலாம் அல்லவா? ஆகவே, அவர் சொல்லும் யோசனையை ஏற்றுக் கொண்டால் என்ன? நாலுபேர் அறிய, பகிரங்கமாக முஸ்லிம்களில் ஒருவரின் மூக்கு அறுபடுவது, மற்றவர்களுக்கு நல்ல படிப்பினையாக இருக்கமுடியும். ஆதலால், நேற்றிரவு நடந்த அசம்பாவிதம்போல் இனி என்றுமே நடக்காமல் தடுக்க முடியும்'—இவ்விதமாகச் சிந்தனை ஓடியது அவர்கள் உள்ளங்களில்.

அவற்றை உணர்ந்து கொண்டவர்போலவே, பாதிரியார் அம்றிப்னுல் ஆஸை நோக்கி "நாட்டின் பாதுகாவலரான நீங்களே இவ்வளவு சொல்லும்போது, நாங்கள் சம்மதிக்காமல் இருக்க முடியுமா? எங்கள் நெஞ்சங்கள் புண்பட்டுள்ள நிலைமையிலும் உங்களுடைய உள்ளங்களை வேதனைப்படுத்த விரும்பவில்லை. உங்கள் யோசனைகளை ஏற்றுக்கொள்கிறோம். குற்றவாளியைக் கண்டுபிடித்து நீங்கள் சொன்ன தண்டனையை நிறைவேற்றுங்கள். இல்லையானால், உங்களில் யாரேனும் ஒருவர் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நாளை சதுக்கத்தில் நடைபெறட்டும்" என்றார்.

"அல்லாஹ் நாடினல், அப்படியே நடக்கும். நீங்கள் சாந்தியுடன் போய்வாருங்கள்" என்று அவர்களை அனுப்பிவைத்தார் அம்றிப்னுல் ஆஸ்.

கிறிஸ்தவக் குழுவினர் திருப்தியுடன் விடைபெற்றுச் செல்ல, அவர்களுக்களித்த வாக்கை நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலையில் ஆழ்ந்துவிட்டார் அவர். இரவெல்லாம் அவருக்கு அதே சிந்தனைதான். நாளைக்குள் குற்றவாளியை எப்படிக் கண்டுபிடிப்பது? கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டால்....? நெடு நேரம் யோசித்துப் பார்த்தார். இஸ்லாத்தின் கண்ணியத்துக்கு, இஸ்லாமிய ஆட்சியின் நேர்மைக்கு, இஸ்லாமியரின் நீதி வழுவாத தன்மைக்குப் பங்கம் ஏதும் வராமல் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஆழப்பதிந்து நின்றது. ஓர் உறுதியான முடிவுக்கு வந்த பின், நிம்மதியுடன் படுக்கைக்குச் சென்றார்.

மறுநாள் விடிந்தது. நாட்டின் காவலரால் கிறிஸ்தவக் குழுவினருக்குக் கொடுத்த வாக்குறுதியைப்பற்றிய செய்தி நகரெங்கும் அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே சதுக்கத்தில் நகர மக்கள் திரண்டுவிட்டனர்.

ஏசுநாதரின் சிலைக்கு நேர்ந்த அவமானத்துக்கான பதிலுக்குப் பதில் ஒரு முஸ்லிமின் மூக்கு அறுபடப் போவதை நினைத்து உள்ளூற மகிழ்ந்தவர்களாக நின்றார்கள் கிறிஸ்தவர்கள்.

முஸ்லிம்களின் உள்ளங்களிலோ வருத்தத்தினூடே ஒருவிதப் பெருமையும் இழைந்திருந்தது. தங்களில் ஒருவர் பகிரங்கமாக அங்க சேதப்படுவதைக் குறித்து அவர்கள் சஞ்சலம் அடைந்தபோதிலும், இஸ்லாமிய ஆட்சியின் நேர்மையை எடுத்துக் காட்டுவதற்கான நல்ல வாய்ப்பை எண்ணி சந்தோஷப்பட்டுக்கொண்டார்கள். இஸ்லாத்தின் பெருமையையும் இரசூலின் தூய நாமத்தையும் காக்க முன்வரும் அந்த

முஸ்லிமுக்கு ஆபத்து வராமலே காக்க ஆண்டவனிடம் துஆ இறைஞ்சினார்கள்.

வேறுபட்ட எண்ணங்களுடன் நின்றுகொண்டிருந்த கூட்டத்தினரிடையே திடீரென ஒருமுகமான பரபரப்பேற்பட்டது. அம்ரிப்னுல் ஆஸ் சதுக்கத்துக்கு வந்துவிட்டார்! அவருக்கு மக்கள் மரியாதையுடன் வழிவிட்டனர்.

அவர் முகத்திலே கம்பீரமும் கடமை உணர்ச்சியும் ததும்பின. ஏதோ தீர்மானத்தின் உறுதி சுடரிடும் கண்களுடன் கூடியிருந்தோரைப் பார்த்தார்.

பிறகு அவர்களை நோக்கிச் சொன்னார்:

"கிறிஸ்தவ அன்பர்களே! இஸ்லாமியத் தோழர்களே! நம்மில் ஒரு பகுதியினர் மனவேதனைப்படும்படியும், மற்றொரு பகுதினர் வெட்கப்படும்படியுமான சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. கிறிஸ்தவ சகோதரர்களின் பக்திக்குப் பாத்திரமானவரும், முஸ்லிம்களின் மரியாதைக்கு உரியவருமான ஈஸா நபியவர்களின் உருவச் சிலைக்கு நம்மில் யாரோ ஒருவர் பங்கம் இழைத்துவிட்டார். அதற்குப் பரிகாரம் காணவே இங்கு நாம் கூடியிருக்கிறோம். ஈஸா நபி அவர்களையும், மர்யம் அம்மையார் அவர்களையும் பரிசுத்த திருக்குர்ஆன் மிக்க உயரிய முறையிலேயே குறிப்பிடுகிறது. அன்னவர்களைப் புனிதமாகப் போற்றி வரும் கிறிஸ்தவ மக்களின் புண்பட்ட உள்ளங்கள் ஆறுதல் அடையும் வழி செய்யவேண்டும். அதே சமயம் இஸ்லாமின் சாந்தி நெறிக்கு எவ்விதப் பழியும் நேராமல் தடுக்கவேண்டும். இதற்காகக் கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள தவற்றுக்குக்குரிய தண்டனையை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே இஸ்லாமியரின் நேர்மைக்கு அழகு."

அவ்வாறு கூறி முடித்தவுடன், அப்ரிப்லுல் ஆஸ் அன்று தம்மைக் காண வந்திருந்த பாதிரியாரைத் தமது அருகில் அழைத்தார்.

"பாதிரியார் அவர்களே! இங்குள்ள கிறிஸ்தவரின் தலைவர் நீங்கள். உங்கள் மக்களது கோரிக்கையைத் தெரிவித்துக்கொண்டீர்கள். அதை ஏற்றுக் கொண்ட என் மீது இரட்டைப் பொறுப்பு விழுந்திருக்கிறது. நான் இங்குள்ள முஸ்லிம்களின் தலைவன் மட்டுமல்ல, நாட்டின் காவலனும்கூட. குடிமக்களிடையே பாகுபாடில்லாமல் பரிபாலிக்கவேண்டியது எனது கடமை. குற்றவாளி கண்டுபிடிக்கப்படாத நிலையில், உங்கள் மத உணர்ச்சி பாதிக்கப்பட்டதற்கான தண்டனையை நானே ஏற்றுக்கொள்கிறேன்" என்றவராக, உறையிலிருந்து தமது உடைவாளை உருவி பாதிரியாரிடம் நீட்டினார்.

அதைக் கையில் வாங்கிய பாதிரியாரின் கண்கள் அதன் கூர்மையைக் கவனித்தன. கைவிரல் வாளின் கூர்மையை இலேசாகத்தொட்டுப் பரிசோதித்தது.

அவரிடம் "கொஞ்சமும் தயங்கவேண்டாம். உங்கள் காரியத்தை நடத்துங்கள்" என்று சொல்லி தண்டனையை ஏற்கச் சித்தமாக நின்றார் அமீர்.

அவரது நேர்மைத் திறனும் நெஞ்சுறுதியும் கிறிஸ்தவர்களின் நெஞ்சங்களைக்கூட அசைத்துவிட்டன. முஸ்லிம்களின் உள்ளங்கள் கலங்கி நின்றன.

வாளின் கூரிய முனை அந்தச் சுத்த வீரனின் எடுப்பான மூக்கைத்துண்டித் தெரிவது இனி எந்த வினாடியோ! களை நிரம்பிய அவர் முகம் காணக் கொடூரமாகிவிடுமே?

அடுத்து நிகழப்போவதை எதிர்நோக்கி ஊசி முனையிலே நின்றது, திகைப்புண்ட மக்கள் கூட்டம்.

"நிறுத்துங்கள்! அவரை ஒன்றும் செய்யாதீர்கள்" என்ற அலறல் அங்கு நிலவிய நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு பாய்ந்துவந்தது.

எல்லோரின் பார்வையும் குரல் வந்த திக்கை நோக்கித் திரும்பியது.

முஸ்லிம் படைவீரன் ஒருவன் குடல் தெறிக்க ஓடிவந்தான்.

மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்க, பாதிரியாரை அணுகி நின்றான்.

"இதோ சிலையிலிருந்து பெயர்த்த மூக்குத் துண்டம்! குற்றவாளி நானே! ஏதோ வெறியில் அன்று சிலையைச் சிதைத்துவிட்டேன். அதற்கான தண்டனையை எனக்கு அளியுங்கள். எங்கள் அருமைத் தளபதியார் தீங்கொன்றும் அறியாதவர். அவருக்கு இந்த கொடுமை வேண்டாம்!" என்று பேசமுடியாமல் பேசினான்.

பாதிரியாரின் முன் மண்டியிட்டவனாக "தாமதம் செய்யாதீர்கள். தங்கள் கையில் உள்ள வாள் என் மூக்கை அறுத்து எறியட்டும்!" என்று ஆவேசமாகக் கூறினான்.

அதைக் கண்ட கூட்டம் வாயடைத்து நின்றது.

எவ்வளவோ திடமாக இருந்த பாதிரியாரும்கூடக் கணநேரம் அசைவற்றுப் போனார். பிறகு தமது கையிலிருந்த பளிச்சிடும் வாளைப் பார்த்தார். ஏதோ யோசனையில் அவரது நெற்றி சுருங்கியது. மறுகணம் அவரது பார்வை தம் முன்னே மண்டியிட்டிருந்த வீரன்முன் சென்றது. அடுத்து தளபதியாரை நோக்கினார். அவர்களது கண்களிலே ததும்பி நின்ற கடமை உணர்வும், உண்மை வீரமும் அவரது உள்ளத்தை நெகிழச் செய்துவிட்டன. கையில் பிடித்திருந்த வாளைத் தூர எறிந்தார்.

எல்லோரும் ஆச்சரியப்பட்டவர்களாக நிற்க, பாதிரியார் கூட்டத்தினரை நோக்கிக் கூறினார்:

"இந்த வீரன் புண்ணியம் செய்தவன். தளபதியார் புண்ணியம் செய்தவர். எல்லோரையும்விட, இவர்களைப் போன்ற பண்புள்ள மனிதர்களை உருவாக்கும் இலட்சியங்களை உலகுக்குத் தந்த அந்த மனிதப் புனிதர் மாநபி போற்றுதலுக்கு உரியவர். சிலையைப் பங்கப்படுத்தியது குற்றம்தான். ஆனால் அதற்காக ஒரு மனிதனின் முகத்தை—தெய்வப் படைப்பைச் சிதைத்து அலங்கோலப்படுத்துவது அதை விடப் பெரிய குற்றம். தீங்கிழைப்பவருக்கும் அன்பு காட்ட வேண்டும் என்பதுதான் எங்களது ஏசுநாதரின் பொன் வாக்கு. அவரது தூய நாமம் வாழட்டும். இனியாவது நாம் எல்லோரும் ஒருவர் மத உணர்ச்சிகளை மற்றொருவர் அனுசரித்து ஒற்றுமையுடன் இருந்துவர கர்த்தர் அருள்வாராக!"

"அல்லாஹு அக்பர்! அல்லாஹ்வின் ரஸூல் மீது சாந்தி உண்டாவதாக!"

"ஏசுவின் புனித நாமம் ஓங்கட்டும்!"
—என்ற உற்சாகமான வாழ்த்தொலிகள் காற்றிலே இணைந்து ஒலித்தது, அவரது பேச்சை ஆமோதிப்பது போல் இருந்தது.

நிறைவு பெற்ற நெஞ்சம்

மணல் வெளி மனிதக் கடலாக மாறியிருந்தது!

புனிதப் பயணத்திலே புண்ணிய நாடு வந்திருந்த ஆயிரமாயிரம் முஸ்லிம்கள் அராபாத்திலே குழுமியிருந்தனர். உலகின் நாலு பக்கங்களிலிருந்தும் வந்த அவர்களில்தான் எத்தனைவிதம்! முகத்தோற்றத்திலே, உருவ அமைப்பிலே, நிறத்திலே, எவ்வளவு வேறுபாடு!

ஆனால்.. அந்த வேற்றுமையில்தான் என்ன ஒற்றுமை! பல்வேறு நதிகள் சங்கமமாகிய பெருங் கடலைப்போலத்தான் இருந்தது அவர்கள் கூட்டம்.

அரசன் என்றும், அடிமை என்றும் பேதமில்லை. ஆண்கள் என்றும் பெண்கள் என்றும் பாகுபாடு இல்லை. பெரியவர்களும் சிறுவர்களும் எல்லோருமே ஒரேவிதமான வெள்ளை ஆடைகளில் திரண்டு நின்றது பகலவன் ஒளியில் வெண்திரைகள் பட்டொளிக்கும் காட்சியை நிகர்த்தது.

ஒரே இனத்தவராய், ஒரே மனத்தவராய் ஏக நாயனைப் புகழ்ந்து அவர்கள் எழுப்பிய கோஷம் பேரலைகளின் ஆர்ப்பரிப்பைப்போல் ஒலித்தது.

"லப்பய்க்! அல்லாஹு ம்ம லப்பய்க்!"

அதைச் சொல்லும்போது அவர்கள் வாய்கள் இனித்தன. உடல்கள் புல்லரித்தன. உள்ளங்கள் ஆனந்தப் பரவசமாயின.

தம்மை மறந்த நிலையில் மீண்டும் மீண்டும் அதை உச்சரித்தனர்.

உலக பந்தத்தை ஒதுக்கி—உற்றார் உறவினரைப் பிரிந்து—இறைவன் கட்டளைக்குத் தலை சாய்த்து—புனித மக்காவிலே கூடிய அவர்கள் பாக்கியசாலிகள் தாம். வாழ்விலே எல்லோருக்கும் கிடைத்துவிடும் பாக்கியமா அது?

அந்தப் பாக்கியசாலிகளில் ஒருவராக இருந்தார் மகான் துன்னூன். பல நூறு மைல்களுக்கப்பால் மிஸ்ரிலிருந்து ஆறுகளையும் பாலைகளையும் கடந்து ஹஜ்ஜை நிறைவேற்ற வந்திருந்தார்.

அடியானின் சிரத்தைப்போல மெல்ல மெல்ல அடிவானத்தை நோக்கிச் சூரியன் தாழ்ந்துகொண்டிருந்தது

பொழுது சாய்ந்து வெகு நேரமாகியது. அரபாத்தில் அந்தியிருள் குவிந்தது. அமைதி நிலவியது. மைதானம் மனிதச் சந்தடியற்றிருந்தது. இல்லை, ஒரே ஓர் உருவம் மட்டும் அங்கே தன்னை மறந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தது.

கடமையை முடித்த ஆத்ம திருப்தியிலே, அன்றைய சம்பவங்களால் நெஞ்சு நெகிழ்ந்திருந்த நிலையிலே, மகான் துன்னூன் ஆழ்ந்த தியானத்தில் அவரையுமறியாமல் அமர்ந்துவிட்டிருந்தார்.

பற்றற்ற துறவியான அவர் உள்ள வானில் மின்னல் என ஓர் ஆசை வீசியது!

அவ் வருஷம் முதன்மையாக ஏற்றுக்கொள்ளப் பட்ட ஹஜ்ஜை நிறைவேற்றியவர் யார்? என்ற வினு அவர் மனத்தில் எழுந்தது.

அரபாத்திலே கூடிய ஆயிரமாயிரம் பேர்களில் அவரை எப்படித் தெரிவது? விசித்திரமான ஆசை தான்!

ஆனல்...ஆண்டவன் நினைத்துவிட்டால் அது பெரிய காரியமல்லவே?

அந்தக் கேள்வி அவரது நெஞ்சத்திலே மீண்டும் மீண்டும் எழுந்தது, நெடுந் தியானத்தினூடே.

திடீரென அவர் முன் ஒருவர் தோன்றினர். வயோதிகர். முகத்தில் சுருக்கங்கள் விழுந்திருந்த போதிலும், அதில் ஒரு தனி அழகு தவழ்ந்தது. கண் களிலே அமைதியின் ஆழம், திருப்தியின் பெருமிதம் சுடரிட்டது. அவர் ஏதோ வேலை செய்துகொண்டிருந் தார். ஒருகண நேரம்தான்—பிறகு உருவம் மறைந்து விட்டது.

'அவர் யார்? அப்போது தமது மனக் கண்முன் தோன்றிய காரணம் என்ன?' என்ற சிந்தனை மகான் துன்னூன் மனத்தில் ஓடியது.

'ஒருவேளை...அவர்தாம் தம் உள்ளத்தில் ஊடாடிய கேள்விக்குரியவரோ?'

"ஆம், அவரேதான்!" என்று மகான் துன்னூன் காதில் ஏதோ அசரீரி ஒலித்தது.

அரேபியாவில் அந்த வருஷம்கூடிய ஹாஜிகள் அனைவரிலுமே மக்காவுக்கு வராத அவருடைய ஹஜ்ஜே முதன் முதலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று யாரோ தம்மிடம் சொல்வதுபோல் இருந்தது, மகான் துன்னூனுக்கு.

என்ன! புனிதப் பயணம் வராமலேயே ஹஜ்ஜின் பயனு? அதிலும் ஏற்றமான ஹஜ்—ஹஜ்ஜ ுல் அக்பர்!

அவர் எந்த ஊர்? பெயர் என்ன? என்ற கேள்விகள் எழுந்த நேரத்தில் அசரீரி தொடர்ந்தது. "அந்தப் பெருமைக்குரியவர் திமிஷ்கில் வாழும் அலீமது அஃகாக் ஆவார்!"

மிஸ்ரின் ஞானிக்கு எல்லாம் புதிராக இருந்தன. தியானம் கலைந்து வெகுநேரம்வரை அவர் திகைப் புண்டவராக இருந்தார்.

ஹஜ்ஜை நிறைவேற்றக் கால்நடையாக வந்தவர்கள் எத்தனையோ பேர். ஒட்டகங்கள் மீதேறி வந்தவர்கள் எத்தனையோ பேர். ஆறு, மலை, கடல், காடுகளைக் கடந்து வந்தவர்கள் எத்தனை எத்தனையோ பேர்கள்! ஆனல் அவர்கள் எல்லோருக்கும் முன் மக்கா வராமலே ஊரிலிருந்துகொண்டே ஹஜ்ஜின் பயனையடைந்த அந்தப் பெரிய பாக்கியசாலியை நேரில் பார்த்துக் கண்ணும் கருத்தும் குளிரவேண்டும் என்ற எண்ணம் மகான் துன்னூனை உந்தியது.

மறுநாள்...

புனிதப் பிரயாணிகள் மினவை நோக்கித் திரண்டனர். அவரும் சென்றூர்.

இஸ்லாத்தின் தந்தையாகிய இப்ராஹீம் நபியவர்கள் தியாகத்தின் சிகரத்தை யெட்டிய சம்பவத்தை நினைவூட்டும் அதே மினுதான்.

தள்ளாத வயதிலே தவமிருந்துபெற்ற பிள்ளைக் கனிபமுதையும்கூட இறைவழியில் அர்ப்பணிக்கத் தயங்கவில்லை அந்தத் தியாகச் செம்மல். அடி பணிதலுக்கு ஓர் அழகிய முன்மாதிரியாக அவர்கள் விளங்

கினர்கள். அதனால் அவர்கள் 'அல்லாஹ்வின் தோழர்' ஆனார்கள்.

அவர்களது மகனான இஸ்மாயீல் நபியவர்கள் தாம் என்ன? தந்தைக்கேற்ற தனயனாக இருந்தார்கள். தகப்பனார் நீட்டிய கூர்மையான கத்தி முனையிலே தமது [illegible]த்தை வைக்கத் துணிந்தார்கள். இறை நாட்ட[illegible]ப் பணிவதைவிட வேறு ஆனந்தம் என்ன இருக்க முடியும்?

அம் மனிதப் புனிதர்களைப் பற்றிய நினைவுகள் அடுத்தடுத்து மனதில் நிழலாடின. அவர்களைப்போல நடந்து இறைவனின் அருளைப் பெறுவதில்தான் வாழ்வின் இலட்சியம் இருக்கிறது என்ற உணர்வு தோன்றியது.

ஹஜ்ஜுச் சடங்குகள் எல்லாம் முடிந்து, மக்கா திரும்பினர் ஹாஜிகள்.

அங்கிருந்து மிஸ்ருக்குத் திரும்பாமல் ஷாம் தேசத்துக்கு விரைந்தார். துன்னூன்.

'கிடைப்பதற்கு அரிய பெரும் பாக்கியம் அவருக்கு எப்படிக் கிடைத்தது? அதற்காக அவர் செய்த அவ்வளவு சிறந்த நன்மைதான் என்ன?' என்று வழியெல்லாம் தம்மைத் தாமே கேட்டுக்கொண்டார் அவர்.

ஹிஜாஸ் எங்கே, ஷாம் எங்கே? நெடுந்தொலைவு, நீண்ட பயணம். இருந்தாலும், எதிர்ப்பட்ட இன்னல்களையெல்லாம் பொருட்படுத்தாது சென்றார். உண்மையில், அவை அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அவர் மனமெல்லாம் அஹ்மது அஷ்காக்கைக் காணவேண்டும் என்பதில்தான் பதிந்திருந்தது.

பிரயாணக் களைப்பிலும்கூட அவர் உள்ளம் சோர்ந்துவிடவில்லை.

திமிஷ்க் நகரை அடைந்தபோது, அவ்வளவு பெரிய நகரில் அஹ்மது அஷ்காக்கின் இருப்பிடத்தைத் தேடுவது பற்றி அவர் மனம் மலைக்கவில்லை. ஏதோ உள்ளுணர்வு அவரை ஈர்த்துச் சென்றுபோய் ஒரு குடிசையின் முன் நிறுத்தியது.

வெளித் திண்ணையிலே ஒரு கிழவர் அமர்ந்து செருப்புத் தைத்துக்கொண்டிருந்தார்.

மகான் துன்னூனல் ஒருகணம் தமது கண்களை நம்பமுடியவில்லை.

அரபாத்திலே தமது மனத் திரையில் தோன்றிய அதே கிழவர்தாம் அங்கு இருந்தார்—செம்மானுக! அவருக்கா அந்தப் பெறுதற்கரிய பேறு கிட்டியது?

அல்லாஹ்வின் செயலை யார்தான் அறியமுடியும்!

மற்றவர்களின் பாதரட்சைகளை மட்டுமன்றித் தமது உள்ளத்தையும் செம்மை செய்துவிட்ட செம் மானுகத்தானிருக்கவேண்டும் அவர்.

கிழவர் ஏறிட்டுப் பார்த்தார். தொட்டிருந்த வேலையை விட்டுவிட்டு, மகான் துன்னூனின் ஸலா முக்கு மறுமொழி கூறி, தேடிவந்தவரைப் பணிவுடன் வரவேற்றார்.

ஏழையவரால் முடிந்த உபசாரம் செய்தார். அவ ரளித்த கூழும் இன்னமுதாக இருந்தது, மகான் துன் னூனுக்கு தம்மைவிட பாக்கியசாலியான அவரது கையால் அளிக்கப்பட்ட விருந்து அல்லவோ அது!

அந்தப் பெரும் பாக்கியத்துக்கு அவரைத் தகுதி யாக்கிய அந்த நல்ல காரியம் என்ன? என்பதை அவர் வாய்மொழியாகக் கேட்கும் தருணத்தை எதிர்நோக்கி யிருந்தார் மகான் துன்னூன்.

“இந்த வருஷம் நீங்கள் ஹஜ்போனீர்களா?”

என்று பேச்சை ஆரம்பித்தார் மிஸ்ரின் பெரிய ஞானி.

"போகவேண்டும் என்ற நாட்டம்தான்; ஆனல் போகமுடியவில்லை"

"ஏன்? அப்படி என்ன தடை ஏற்பட்டது?"

அந்தக் கேள்விக்கு அஹ்மது அஷ்காக்கிடமிருந்து உடனடியாகப் பதில் வரவில்லை.

அவர் உள்ளத்தில் சுழன்ற எண்ணங்கள் எல்லாம் பெருமூச்சாக வெளிவந்தன.

"அதை ஏன் கேட்கிறீர்கள்! அது ஒரு பெரிய கதை. சோகமானது" என்று அஹ்மது அஷ்காக் அந்தக் கதையைக் கூறினர்.

★ ★ ★

வாழ்வில் ஒரு முறையாவது ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும் என்ற நாட்டம் அஹ்மது அஷ்காக்கின் உள்ளத்தில் ஏற்பட்டது இன்று நேற்றல்ல. மக்கா மதீனு போகவேண்டும்—புனிதக் கடமையை முடிக்கவேண்டும்—அல்லாஹ்வின் முதல் பள்ளியில் தொழவேண்டும்—நாயகம் அவர்களின் 'ரௌலாஷரீபை'த்தரிசிக்க வேண்டுமென்ற அவா அவர் மனத்தில் நாற்பது வருட காலமாக முளை விட்டுக் கிளையிட்டு உரமாக நின்றது.

அவரோ ஏழை, நினைத்ததும் பயணப்பட முடியுமா? செலவுப் பணத்திற்கு என்ன செய்வது? தமது கஷ்ட ஜீவனத்துக்கிடையே அரும் பாடுபட்டு மிச்சம் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்துவந்தார். அயராது உழைத்த, சிறுகச் சேர்க்கும் எறும்புகளைப் போலவே அவரும் சேர்த்துவந்தார். நாற்பதுவருடப் பிரயாஸைக்குப் பிறகு அந்த வருடம்தான் அவர் ஹஜ்ஜுக்குப் புறப்பட முடிவு செய்தார்.

பயணத்துக்குத் தயாராகிக்கொண்டிருந்த வேளையிலே, எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. அது

அவருடைய திட்டத்தையே அடியோடு மாற்றி விட்டது.

அவர் சேமிப்பை யாரும் திருடிச் சென்றுவிட வில்லை. அவரது வீட்டில் விபரீதம் எதும் நடந்துவிட வில்லை. மனைவி, மக்கள் எல்லாம் அவரைச் சந்தோஷ மாக வழியனுப்பும் நிலையில் நலமாகத்தான் இருந்தார் கள்.

ஒரு நாள்...

அஹ்மது அஷ்காக் தமது மகனை அடுத்த வீட்டுக்கு ஒரு காரியமாக அனுப்பினர்.

சிரித்துக்கொண்டு போனவன் சற்று நேரத்தில் அழுதவண்ணம் திரும்பினன்.

"எனப்பா அழுகிறாய்?" என்று அவர் தமது புதல்வனிடம் வாஞ்சையுடன் கேட்டார்.

தலையை அசைத்து அசைத்து அவன் மேலும் அழுதான்.

"யார் என்ன சொன்னர்கள்?"

பையன் கண்ணைக் கசக்கிக்கொண்டு அழுதான்.

அவனை அருகில் அழைத்தவராய் விஷயத்தைக் கேட்டார்.

"அவர்கள் எல்லாம் கறி சாப்பிட்டார்கள், நான் கேட்டேன். எனக்குக் கொஞ்சங்கூடத் தரவில்லை" என்று விம்மலுக்கிடையே சொன்னன்; விக்கி விக்கி அழுதான்.

சிறு பையன் அவன். கண்டதைக் கேட்கும் வயது.

பெற்ற பாசம் அஹ்மது அஷ்காக்கின் நெஞ்சில் உறைத்தது.

சின்னப் பையன் வாய்விட்டுக் கேட்டும் கொடுக்க மறுத்த அவர்களது மனப்பான்மையை நினைக்க அண்டை வீட்டார்மீது ஆத்திரமாக வந்தது.

"இவர்களும் மனிதர்களா? கொஞ்சமாவது ஈவு, இரக்கம் வேண்டாமா? பொங்கிவந்த கோபத்தில் சற்று உரக்கக் கூவிட்டார் அஹ்மது அஷ்காக்.

பிறகு மகனைச் சமாதானம் செய்துகொண்டிருந்த போது, பழகிய குரல் கேட்டது. ஏறெடுத்துப் பார்க்காமல் மைந்தனைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"மன்னிக்க வேண்டும்! நீங்கள் சொன்னது என் காதில் விழத்தான் செய்தது. ஆனால் விஷயம் நீங்கள் சொன்னதுபோல் அல்ல" என்று அந்தப் பழகிய குரல் பேசியது.

"பின் வேறெதற்காகப் பிள்ளையை அழுகவிட்டீர் கள்?" என்று கேட்டார் அஹ்மது அஷ்காக்.

வந்தவர் ஒருகணம் மௌனமாக நின்றார். மனத்தில் நடந்த போராட்டத்தை முகக்குறி காட்டியது.

பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவராக மறுபடியும் பேசினார்.

"உண்மை இதுதான். கேளுங்கள்! எங்கள் வீட்டில் ஐந்து நாட்களாகத் தொடர்ந்து பட்டினி. ஆனால் கையிரந்து சாப்பிட மனம் இல்லை. மனைவி மக்கள் பசிதாளாது துடித்திருந்தனர். அதைக் கண்டு சகியாத நான் வெளியே போனேன். வயலிலே ஓர் ஆடு செத்துக் கிடந்ததைக் கண்டேன். வயிற்றின் தீயைத் தணிக்கும் ஆவலில், அந்த ஆட்டின் இறைச்சியை எடுத்துவந்து வீட்டில் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது உங்கள்

பையன் வந்தான். செத்த மிருகத்தின் மாமிசத்தை அவனுக்குக் கொடுக்க மனம் வரவில்லை. அவன் அழு தாலும் பரவாயில்லை என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டேன். கொடுக்க மறுத்துவிட்டேன்" என்று சொல்லி நிறுத்தினர்.

அதைக் கேட்ட அஹ்மது அஷ்காக்கின் உள்ளம் பயங்கரக் கனவுகண்டவன் உள்ளத்தைப் போல நடுங் கியது.

வந்திருந்தவரை ஏறிட்டுப் பார்த்தார்.

சுருங்கிய தோலுடன் கூடிய எலும்புக் கூடு ஒன்று அவர் முன் நின்றது! கண்கள் ஆழமாகக் குழி விழுந்திருந்தன. நிற்கமுடியாமல் தள்ளாடிக்கொண் டிருந்தன கால்கள்.

ஆம், பசியே மனித உருப்பெற்று நின்றதுபோல் இருந்தது.

ஆத்திரத்தில் தாம் கொட்டிய வார்த்தைகளை நினைந்து, தம்மை நொந்துகொண்டார் அஹ்மது அஷ்காக்.

"ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டேன். மன்னி யுங்கள்" என்ருர்.

"மன்னிக்க ஆண்டவன் இருக்கின்ருன்" என்று ஈனக் குரலில் பதில் சொன்னுர் அண்டை வீட்டுக் காரர்.

தள்ளாடித் தள்ளாடி அவர் சென்ற காட்சி அஹ் மது அஷ்காக்கின் மனத்தையே நிலை பிறழ்ந்து தள் ளாடச் செய்தது. அடுத்த வீட்டு மனிதரின் மறைந்த உருவம் அவர் உள்ளத்தில் கோரமாக ஊசலாடியது.

'செத்த ஆட்டின் இறைச்சியைத் தின்னும் அள வுக்குப் பசியால்வாடி, பட்டினி கிடந்த அவர்களது

நில்லை, ரியாமலிருந்த நாமும் ஒரு மனிதர்தாமா?' என்று தம்மையே கேட்டுக்கொண்டார் அஹ்மது அஷ்காக்.

ஆண்டவன் படைப்பான மனிதன் ஒருவனை அண்டை வீட்டில் பட்டினி கிடக்கவிட்டு, அல்லாஹ்வைத் திருப்திப்படுத்த மக்காவுக்கா போக வேண்டும்?

பசியால் வாடும் ஒருவனுக்கு உணவளிப்பது கடமை அல்லவா?

நெடுநாள் ஆசை ஒருபுறம், மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமை மறுபுறம். தறி விசைபோல் அங்குமிங்கும் பாய்ந்துகொண்டிருந்தது அவர் உள்ளம்.

பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக எழுந்தார். அறைக்குள் சென்றார். பெட்டியைத் திறந்து நாற்பது வருட காலமாகச் சேர்த்துவைத்திருந்த பண முடிப்பை எடுத்துக்கொண்டுபோய் அண்டை வீட்டுக்காரரிடம் கொடுத்தார்.

அப்போது அவர் நெஞ்சத்திலே எவ்விதக் கசப்புமில்லை. ஆண்டவன் நாட்டத்திற்கு முன் அவரது ஆசை எம்மாத்திரம்?

"இந்தாருங்கள்! மறுக்காமல் வாங்கிக்கொள்ளுங்கள். உங்கள் நிலைமை தெரியாமல் இது நாள்வரை இருந்துவிட்டேன். ஆண்டவன் என்னை மன்னிக்கட்டும்! இதை வைத்து நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நல்லவிதமாகச் சாப்பிட்டு வாழுங்கள். அதுவே எனக்குச் சந்தோஷம். அது மட்டுமா? உம்முடைய எளிய குடிசைதான் இந்த வருஷம் எனக்குப் புனித மக்கா" என்று உள்ளம் நிறையச் சொன்னார்.

அண்டை வீட்டுக்காரருக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்வதென்று தெரியாமல் வாயடைத்து நின்றார். உணர்ச்சியெல்லாம் கண்ணீராக வழிந்தது.

"உங்கள் உள்ளம் பெரிது. அல்லாஹ் உங்களுக்கு நல்ல கூலி தருவான்...நிச்சயம் தருவான்" என்று நன்றியுணர்ச்சி ததும்பக் கூறினர்.

மனிதனுக்குச் செய்யவேண்டிய கடமை ஆண்டவனுக்குச் செலுத்தும் காணிக்கை தானே! அந்த எண்ணத்திலே தமது ஹஜ் பயணம் தடைப்பட்டதைப்பற்றி குறைபடவில்லை அஹ்மது அஷ்காக். அண்டை வீட்டு மனிதரின் வார்த்தைகளால் அவர் நெஞ்சம் நிறைவு பெற்றது.

★ ★ ★

அஹ்மது அஷ்காக்கின் வரலாறு மகான் துன்னூனின் உள்ளத்தின் ஆழத்தைப் போய்த் தொட்டது. ஆண்டவன் வழியில் தமது ஆசையை அர்ப்பணித்த அந்த மனிதரது தியாகத்தின் தூய தன்மையை நினைக்க நினைக்க, அவர் நெஞ்சம் நெக்குருகியது. கண்களில் நீர் முத்திட்டது.

இரு கரங்களாலும் அஹ்மது அஷ்காக்கை ஆரத் தழுவினர்.

"அஹ்மதே! நீர் பாக்கியசாலி. ஹஜ்ஜின் உண்மையான இடத்தை நீர் கண்டுபிடித்துவிட்டீர்" என்றார் உணர்ச்சிப் பரவசத்தில்.

பிறகு தமக்கு அரபாத் மைதானத்தில் ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லிக் காண்பித்தார்.

"அல்ஹம்து லில்லாஹ்!" என்றவராய் அஹ்மது அஷ்காக் இருகரம் ஏந்தி அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினர். உள்ளத்தில் ஏற்பட்ட அமைதியின் ஒளி அவர் கண்களில் நிறைந்திருந்தது.

அதைக் கண்ட மகான் துன்னூனின் நாவும் அல்லாஹ்வின் புகழை உச்சரித்தது.

மதீனாவை நோக்கி

ஒட்டகக் கூட்டம் ஊர்ந்து சென்றுகொண்டிருந்தது.

உச்சி வேளை. அராபியப் பாலைவனத்திலே சூரியன் கொடுமையாகக் காய்ந்துகொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை மணல் பரப்பு நெருப்புக் கடலாக விரிந்து கிடந்தது. அதிலிருந்து கிளம்பிய தகிக்கும் கானல் அலை அலையாக மோதிக்கொண்டிருந்தது.

'கள்ளிப் பொறி பறக்கும் அந்தக் கானலில்' ஆடி அசைந்து மெதுவாகத் தளர் நடைபோட்டன ஒட்டகங்கள். அவற்றின் கோணல் முதுகுகள்மீது குடல் குலுங்கச் சவாரி செய்த பிரயாணிகள் சோர்வடைந்திருந்தனர். அவர்கள் முகங்களிலே வியர்வை முத்துக்கள் கொதிக்கும் குழம்பின் கொப்புளங்கள்போலத் துளித்து எழுந்தன. துடைக்கத் துடைக்கத் துளித்துக் கொண்டே இருந்தன. அப்போது சிரமம் தாளாது அவர் விட்ட நெடு மூச்சிலும் ஒரே வெம்மைதான்!

வாடும் பயிர்கள் வான்மழைக்காகத் தவிப்பது போல, சோம்பியிருந்த அவர்கள் பசுஞ் சோலையை— குளிரோடையை நினைத்து ஏங்கினார்கள்.

அவர்களை யெல்லாம் அப்படி வாட்டி வதைத்த வெப்பத்தையும்கூடப் பொருட்படுத்தாதிருந்தார், அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவர். பாலையின் தகிப்பை விடக் கொடிய அனல் அவர் உள்ளத்திலே கனன்று கொண்டிருந்தபோது, பிற உலகைக் கவனிக்க அவருக்கு நேரமேது? அன்பு என்னும் விறகிலே காலம் எண்ணெய் இட, தணியாது எரிந்துகொண்டிருந்த ஆசைத்தீயின் உக்கிரத்தை அவரால் சகிக்க முடியவில்லை. அதுவும் சாதாரண ஆசையா? கண் குளிரக் காணாமலேயே தம் ஐம்புலன்களையும் கவர்ந்து நின்ற வள்ளல் பெருந்தகையைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற பேரவா நான் அவர் உள்ளத்தில் இப்போது வேகமாகக் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது.

அந்த ஆசைக்கனலைத் தணிக்கும் குளிர் ஓடையை—வாடி வதங்கியிருந்த அவர் உள்ளப் பயிர் செழிப்பதற்கான செழுமழையை—இடருற்ற அவர் நெஞ்சம் களைப்பாறிக்கொள்ளும் படர்தரு நிழலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் அவர்.

ஒட்டகக் கூட்டம் மெல்ல, மெல்ல பயணத்தைத் தொடர்ந்தது—மதீனாவை நோக்கி ஊர்ந்தது.

அன்று ஒட்டகத்தின்மீது சவாரி செய்துகொண்டிருந்த அவர் தமதூரிலே ஒட்டகம் மேய்க்கும் பணியாளாகத்தான் இருந்தார். ஒட்டகங்களை அவற்றின் எசமானர்கள் குறைகாண முடியாதபடி எவ்வளவு கவனமுடன் மேய்த்துவந்தாரோ, அதுபோலவே அவர் தமது மனத்தையும் கவனமுடன் மேய்த்து வந்தார். அதைக் கண்டபடி திரியவிடாமல் கண் காணித்தார். பகலிலே வயிற்றுப் பிழைப்புக்காக மேய்ப்புத் தொழிலைச் செய்துவந்த அவர் இரவின் பெரும் பகுதியை ஆத்ம விசாரணையிலும் இறைவணக்கத்திலும் செலவழிக்கும் ஞானியாக இருந்தார்.

உவைஸுல் கர்னீ என்ற அந்த மகான் புலனை

அடக்கி, பொறியை ஒடுக்கி அடிக்கடி நோன்பு நோற்பது வழக்கம். அதனால் அவரது சொற்ப வருவாயிலும் கூட மிச்சம்பிடிக்க முடிந்தது. அதை அவர் தமது அண்டை அயலாருக்கும் மற்றவர்களுக்கும் செலவிடுவதில் இன்பம் கண்டார்.

அந்தகார உலகிலே ஒளியை நாடினர்; பொய்யான உலகிலே உண்மையைத் தேடினர்; அனச்சாரங்களும் அக்கிரமங்களும் மலிந்த அவனியில் ஆசாரத்தை—ஒழுங்கைக் கடைப்பிடிக்கப் பாடுபட்டார் அவர். ஹனீபாக்களில் ஒருவராக விளங்கிய உவைஸ் தமது வயதின் பெரும் பகுதியை உண்மை நெறியைக் கண்டறிவதிலேயே செலவிட்டார். தலை நரைத்து, கண்கள் உட்குழியும் தள்ளாத வயதுவரை அத் துறையிலேயே ஈடுபட்டு வந்தார் அவர்.

அந்தச் சூழ்நிலையில்தான் பாலை, சோலைகளையும் காடுமேடுகளையும் எல்லாம் கடந்து உண்மைப் பாதைக்கு இட்டுச் செல்லும் அழைப்பு வெகுதூரத்தில்—மதீனாவிலிருந்து வந்தது. காரிருளிலே ஒரு மின்னலைப்போல அது உவைஸின் உள்ளத்திலே பளிச்சிட்டு மறையாமல் அங்கேயே நிலைத்துவிட்டது.

பெருமானார் அவர்கள் பிரச்சாரம் செய்துவந்த காலம் அது.

அகிலத்துக்கு ஓர் அருள்கொடையாக, அல்லாஹ்வின் திருத்தூதராகத் தோன்றிய அவர்கள் மக்களை ஏகத்துவத்தின் பால்—உண்மையின் பால்—ஒளியின் பால் அழைத்தார்கள்.

அவர்களின் பொன்னான போதனைகளையும் அருள் மொழிகளையும் யமன் தேசத்திலிருந்த உவைஸ் ஆர்வமுடன் கேட்டுவந்தார். அவற்றைப்பற்றி அல்லும் பகலும் சிந்தித்தார். அவற்றில் பொதிந்திருந்த கருத்துக்களைப் பலவாறு ஆராய்ந்தார். முடிவில், தம் வாழ்

நாள் முழுவதும் விழைந்த, தேடித்திரிந்த அந்த முடிவுக் குத்தான் அவை தம்மைக்கொண்டு சென்றன என் பதைக் கண்டார். பெருமகிழ்வுடன் இஸ்லாத்தை ஏற்ருர். அதுவரை கண்டறியாத நிறைவு அவர் நெஞ் சத்தில் நிலவியது.

அந்த நிலைமையில், அவர் மக்களின் அகவிருளைப் போக்கும் அந்த மணிவிளக்கின் ஒளியை நேரிலே பார்க்க வேண்டும்—அவர்களின் இதயங்களுக்கு விழிப்பூட்டிய குரலின் இனிமையைக் கேட்க வேண் டும என்ற ஆசை அவர் உள்ளத்தில் எழுந்தது.

'நேசரை என்று காண்போமோ?' என்ற கேள்வி தான் அவருடைய நெஞ்சத்திலே இடையருது ஒலித் துக்கொண்டிருந்தது. அண்ணல் அவர்களை நேசித்த ஏனைய நண்பர்களைப்போன்றே அவருள்ளம் சதா மதீனவை நோக்கியது.

அந்த ஆத்மீக ஏக்கம் வெகு நாள்வரை பூர்த்தி யாகவே இல்லை.

எத்தனை எத்தனையோ பேர்கள் புனிதப் பட்டினம் சென்ருர்கள். அண்ணல் அவர்களைக் கண்டார்கள். நெஞ்சத்தில் தைத்து நிற்கும் திருப் போதனைகளை அவர்களின் வாய் மொழியாகக் கேட்டார்கள். புத்துணர்வு பெற்று, தத்தம் வாழ்க்கைகளைப் புதிய தோர் பாதையிலே திருப்பியவர்களாகத் திரும்பி வந் தார்கள். அவர்களில் உவைஸுக்குத் தெரிந்தவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம் தமக்குக் கிடைக்காதா என்று தம்மையே கேட்டுக்கொள்வார் அவர்.

அவரை நபிபெருமானர் அவர்களின் திருமுகத் தைக் காண முடியாமல் தடுத்து நின்ற சூழ் நிலை இதுதான்: வயது முதிர்ந்த தாயாரைக்கவனிக்கும் பொறுப்பு அவருக்கிருந்தது. எந்த நிமிஷமும் கீழே

விழக்கூடிய பழுத்த பழம் அந்த மூதாட்டியார். கண் தெரியாது. கால் முடம். ஏக மைந்தனைத் தவிர்த்து வேறு பற்றுக்கோல் இல்லாத அன்னையவர்களை எப்படிவிட்டுச் செல்வது? அதை நினைத்துப் பார்க்கும் போது மதீனா போக வேண்டும் என்ற ஆசை வெள்ளத்திற்கு தம் விருப்பத்திற்குப் புறம்பாகத் தாமே அணை கட்டிக்கொள்வார் உவைஸுல் கர்னீ.

ஊர் வெளியிலே ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, நபியின் பட்டினத்திலிருந்து திரும்பி வருபவர்களைக் காணும்போதெல்லாம் ஆழ்ந்த பெருமூச்சு விடுவார். தமது ஆற்றாமையை நினைத்து உள்ளூற வருந்துவார். புலம்புவார். பிறகு நபியவர்களைக் கண்டு வந்தவர்களிடம் சென்று, அண்ணல் அவர்களைப்பற்றிக் கனிவுடன் கேட்டுத் தெரிந்து கொள்வதில்தான் அவர் உள்ளம் ஒருவாறு ஆறுதல் அடையும். வள்ளல் நபியவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றியும், அவர்கள் போதனைகளைப் பற்றியும் புதியசெய்திகளை நுண்ணியமுறையில் வெகு ஆர்வமுடன்கேட்டுத் தெரிவார். தெரிந்தபின், நபியவர்களின் வழியிலே, அவர்களது போதனைகளின்படி பிசகாமல் ஒழுகி வந்தார்.

தேனூற மற்றவர்கள் சொல்லக் கேட்க, காலப் போக்கில் அண்ணல் அவர்களைக் காண வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் பெருகியது. அவர்கள் அன்புருவத்தை— கருணை முகத்தை ஒரு முறையாவது காண வேண்டும் என்ற ஆவல் உள்ளத்திலே வியாபித்தது.

காலம் ஓடியது அண்ணல் அவர்களைக் காணாமலே அவர்களைத் தமது அன்பராகக்கொண்டுவிட்டார் உவைஸ். அவர்களுக்கு ஒரு சிறு துரும்பு அளவுகூடத் துன்பம் நேர்வதைத் தாள முடியாத அளவுக்கு அன்

பும் அபிமானமும் அவர் நெஞ்சத்தில் உறைந்து விட்டன.

அப்போது ஒரு நாள்...

உஹுத் யுத்தத்தைப் பற்றிய செய்தி உவைஸுல் கர்னீயின் காதில் விழுந்தது.

"முஸ்லிம்களின் அணியைப்பிளந்துகொண்டு ஒரு குறைஷி வீரன் முன் வந்தான். அவனுடைய வாள் வீச்சின் முன் முஸ்லிம்களின் தலைகள் உருண்டன. அவன் அண்ணல் அவர்களை அணுகியதும் தன் வாளை அவர்கள்மீது வீசினான். அதன் காரணமாக, அண்ணல் அவர்களின் இரும்பு அங்கி உடைந்து, அதன் இரு துண்டுகள் அவர்கள் முகத்தில் பதிந்து இரத்தம் கசியச் செய்தன..." என்று விஷயம் அறிந்தவர் விவரமாகச் சொல்லி வரும்பொழுதே அவர் அன்புள்ளம் துடிதுடித்துவிட்டது. வேதனை அவர் குரலையடைத் தது. கத்திவிட்டார்.

"அல்லாஹ! அன்பு நபியவர்களுக்கா இந்தக் கொடுமை?" என்று வாய்விட்டுக் கதறினார்.

"இப்போது அண்ணல் அவர்கள் மீது எறியப் பட்ட கவண்கல் அவர்களின் பல் ஒன்றைக் கவர்ந்து விட்டது" என்ற சொல் கேட்டபோது அவர் கண்ணீர் மல்கப் பதறினார்.

"என்ன கொடுமை! நம் கருணை நபிக்கா இந்தத் துயரம்?" என்று அலறிக்கொண்டே, ஆவேசமுடன் அருகிலே கிடந்த கல்லை யெடுத்துத் தமது பற்களில் ஒன்றை உடைத்துக் கொண்டார், அன்பர் அடைந்த வேதனையைத் தாமும் அடைய வேண்டும் என்னும் அபிலாஷையால். ஆத்மீக அன்புக்கு அடைக்கும் தாழ் எது?

நாட்கள் தேய்ந்து மறைந்துகொண்டிருந்தும்,

அந்தச் சம்பவம் உவைஸின் மனத்தை விட்டு அகல வில்லை. சோக நினைவு நெஞ்சில் புகைந்து கொண்டிருந்த ஆசைக்குத் தூபமிட்டது. அவர்களைக் காண வேண்டும் என்ற அவா கட்டுக்கடங்காத நிலைமையில், தாயாரை அணுகினார் உவைஸுல் கர்னீ.

"அம்மா, உங்களிடம் ஒன்று கேட்கிறேன். சம்மதம் தருவீர்களா?" என்றார் தயக்கமுடன்.

"அருமை மகனே, கேள்!" என்றார் அவர் அன்னையார்.

"அல்லாஹ்வின் ரஸூலைப் போய்ப் பார்த்துவர வேண்டும். நெடுநாளாக நினைத்து வந்திருக்கிறேன். ஆனால் தங்களைத் தன்னந் தனியாக விட்டுச் செல்ல மனமில்லாத நிலையில், எவ்வளவோ கட்டுப்படுத்திப் பார்த்தேன். ஆசை அடங்கவில்லை. இனியும் அவர்களைப் பார்க்காமல் இருக்க முடியாத நிலை ஆகிவிட்டது. அம்மா! ஒரே ஒரு முறை பார்த்துவிட்டு, சீக்கிரமே வந்துவிடுகிறேன். எந்த இடத்திலும் சுணங்க மாட்டேன்" என்று மன்றாடிக் கேட்டார். அன்னையாரின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து, அவர் காலடியில் அமர்ந்திருந்தார் உவைஸ்.

அலுப்பு சலிப்பில்லாமல் தமக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து, தம்மைப் பேணிப் பாதுகாத்துவந்த தம் அருமை மகனின் வேண்டுகோளைத் தட்ட மனமில்லை, அந்த அம்மையாருக்கு. தனது வாழ்விலே மகன் மிக விரும்பிக் கேட்ட ஒரே ஒரு வேண்டுகோள் அது. கண் தெரியாமலும் நடமாட முடியாமலும் இருந்த நிலையில், மகனது பிரிவு தாங்க முடியாதது தான்! அதற்காக...?

விடை கொடுத்துவிட்டார் அம்மாது சிரோன்மணி, மகனின் தலையை வாஞ்சையுடன் தடவிக் கொண்டே.

"என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம், மகனே! நீ விரும்பிய காரியத்தைத் தங்கு தடையின்றிச் செய். ஆண்டவன் உதவியால் போய்வா. நபியவர்களை அவர்கள் வீட்டில் போய்பார்த்துவிட்டு, விரைவிலே திரும்பி விடு. அல்லாஹ் போதுமானவன்" என்றார். ஒளி இழந்த அவர் கண்களில் கண்ணீர் துளித்தது.

'அல்ஹம்துலில்லாஹ்!' பொறுமைக்குரிய பரிசு கிடைத்துவிட்டது. தமது நெடுநாள் ஏக்கத்தை நீக்கும் உத்தரவு கிடைத்ததைப் பற்றி ஆண்டவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டார் உவைஸ்.

ஒன்றும் முடியாத நிலைமையிலும் உவகையுடன் பெற்ற பிள்ளையின் ஆசையைப் பூர்த்தி செய்து வைக்க முன் வந்த தாயன்பை நினைத்துப் பார்த்தார். அது அவர் தமது தாயாரைவிட்டுப் பிரிந்து போவதின் வருத்தத்தை அதிகமாகத்தான் ஆக்கியது. 'ஆனால் வாழ்வில் ஒரு முறையாவது நபியவர்களைப் பார்த்துவிட்டால், இனி எப்போதும் நிம்மதியான மனத்துடன் தாயார் அருகிலே இருந்துவரலாம் அல்லவா?' என்ற எண்ணம் அந்த வருத்தத்தின் வேதனையைச் சற்று நீக்கியது.

காலம் தாழ்த்தவில்லை. தாம் ஊரில் இல்லாத காலத்தில் தாயாரின் சம்ரட்சணைக்கான ஏற்பாடுகளைப் பறந்து பறந்து பார்த்தார். முடிந்தது, ஒட்டகக் கூட்டத்துடன் சேர்ந்து யமனை விட்டு மதீனாவை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

அரேபியாவின் தென் கோடியிலிருந்த யமனிலிருந்து நபியின் பட்டினம் நானூறு கல் தொலையிலிருந்தது. வழியெல்லாம் கள்ளர் பயம் அதிகம். மேலும், கடக்கக் கஷ்டமான குன்றுகளும் திக்குத் தெரியாத பரந்த பாலைகளும் பிரயாணத்தைச் சிரமமாக்கின. இருந்தும், அண்ணல் நபியவர்களைப் போய்க் காண

வேண்டுமே என்ற ஆசையின் முன் அவையெல்லாம் துச்சமாகத் தோன்றின அவருக்கு. வழியில் எதிர்ப் பட்ட கஷ்டங்களை யெல்லாம் பொருட்படுத்ாது சென்றார்; கருணை நபியவர்களைக் காணும் பாக்கியம் இலேசில் கிடைக்கக்கூடியதா என்ன?

★ ★ ★

மதீனாவின் எல்லையை அடைந்தபோது, தெள்ளிய நீரோடையையும் தீங்கனிச் சோலையையும் கண்டது போலிருந்தது உவைஸுக்கு. பாலைவனப் பயணத்தின் முடிவிலே அந்த நீரோடையின் குளுமையிலும், சோலையின் இனிமையிலும் களைப்பாறித் திளைக்க முந்தும் பிரயாணியைப்போல அவர் புனித-நபியவர்களின் பரிசுத்த இல்லத்தை நோக்கி விரைந்தார்.

அப்போது பக்குவப்பட்ட அவர் உள்ளத்திலும் இனந்தெரியாத இன்ப உணர்ச்சி துள்ள ஆரம்பித்தது. அல்லாஹ்வின் நேசரைக் காணும் இன்பத்திற்கு எதை ஈடு சொல்வது?

'அண்ணல் நபியவர்களுக்கு எப்படி முகமன் கூறுவது? அவர்களிடம் எப்படித் தம்மை அறிமுகப் படுத்துவது?' பல, பல எண்ணங்கள் அவர் மனத்தில் வழியெல்லாம் ஓடிக் கொண்டிருந்தன.

நபியவர்களை அவர்கள் வீட்டில் போய்ப் பார்த்துவிட்டு விரைவில் திரும்பி வரும்படி அவரது தாயாரிட்ட கட்டளை அடிக்கடி அவர் நினைவுக்கு வந்தது.

மன்னருக்கும் மன்னராயிருந்தும், எளியவரில் எளியவராக வாழ்க்கை நடத்திய வள்ளல் நபியவர்களின் வீட்டை நோக்கிச் சென்றார்.

பச்சைச் செங்கல் மதில்களும், ஈச்சங் கிடுகு

களால் வேயப்பட்ட கூரையும்கொண்ட அந்த எளிய குடிலுக்குக் கதவுகூட இல்லை. ஒரு கம்பளிப் போர் வையே கதவாக இருந்தது.

வாயிலோரத்திலே ஒதுங்கியவராக நின்ற அவர், "யா நபியல்லாஹ்!" என்று வெகு மரியாதையுடன் கூப்பிட்டார்.

"யார் அது?"—திரைக்குப் பின்னாலிருந்து வந்த குரல் ஆண் குரலாக இல்லை. குரல் கொடுத்தது ஆயிஷா அம்மையாராகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால், நபியவர்கள் எங்கே?

"யமன்வாசி. ரஸூலுல்லாஹ் அவர்களைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்றார் உவைஸ் பணிவுடன்.

"அவர்கள் வீட்டில் இல்லை. பள்ளிக்குப் போயிருக்கிறார்கள்" என்ற பதில் வீட்டினுள்ளிருந்து வந்தது.

வீட்டை யடுத்துத்தான் பள்ளி. 'அங்கு போய்ப் பார்க்கலாமோ?'—

எழுந்த அதேகணம் அடங்கிவிட்டது அந்த எண்ணம்.

'பள்ளியில் போய் அவர்களை எப்படிப் பார்ப்பது? வீட்டில் அல்லவோ அம்மா பார்க்கச் சொன்னார்கள்?' என்று அவர் உள்ளம் எடுத்துக் காட்டியது.

சற்றுக் காத்திருந்து, வீட்டிலேயே அண்ணல் அவர்களைப் பார்க்க நினைத்தார்.

"நபியவர்கள் எப்போது வீடு வருவார்கள்? சீக் கிரம் திரும்புவார்களா?" ஆவல் நிறைந்த குரலில் கேட் டார் உவைஸ்.

"வரத் தாமதமாகும். வேலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது" என்று ஆயிஷா அம்மையார் தெரிவித் தார்கள்.

'சீக்கிரம் வரமாட்டார்களா? அதிக நேரம் பொறுத்திருக்கமுடியாதே! இவ்வளவு தூரம் வந்து விட்டு நபியவர்களைப் பார்க்காமலா செல்வது? கைக் கெட்டியது வாய்க் கெட்டாமல் போகும் நிலைதானோ?' மனம் குழம்பிய நிலையில் மௌனமாக நின்றார். மறு கணம் அவர் சிந்தனையில் தெளிவு பிறந்தது. அன்னை யின் ஆணையை மீறக்கூடாதென்ற முடிவுக்கு வந்தார்.

"மாதாவின் பாதத்தடியிலே சுவர்க்கம் இருக் கிறது" என்பதுதானே நபியவர்களின் நல்லுபதேசம்? துன்பத்தின்மீது துன்பத்தை அனுபவித்து, கர்ப்பத்தில் சுமந்து பெற்ற தாய்க்கு நன்றி செலுத்தும்படித்தானே அவர்கள் கொணர்ந்த திருமறை கூறுகிறது!

ஏமாற்றத்தின் எல்லையிலும் தமது வேதனையை அடக்கியவராய், பெருமானார் அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற தமது ஆவலைத் தியாகம் செய்தவ ராக, தாய்ச் சொல்லைக் காக்கும் உத்தமத் தனயராக யமனை நோக்கித் திரும்பப் புறப்பட்டுவிட்டார் அந்த அருமை மகனார் உவைஸ்.